



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதை புதிது

கவிதைகள்

மு. சடாட்சரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதை புதிது
மு.சடாட்சரன்
கவிதைகள்
நவீனன் வெளியீடு

PATHAI PUTHITHU
M. SADADSARAN
(POEMS)

© M. Sadadsaran
Rtd. Assistent Director of Education

69D, Main Street
Peria Neelavanai - 01
Kalmunai
077 1341085, 071 9340485

First Edition : November 2012

Type set :
Sajinas

Cover Design & Layout
Nawas Sawfi

Printed by :
Design World Printers - Sainthamaruthu
077 6401296, 071 8217910

Pages : 96

Price : 300/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது அன்பான தாய், தந்தை
அமரர்கள்
வ. முருகேசு, திருமதி கனகம்மா முருகேசு
இருவருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீலாவணன் வாழ்த்து

பெரியநீலாவணை கல்முனை
8-8-66

அரசு தினகரனை மிக
அணியுரிதல் கண்டோம்
அருளையா ஐயாவின் வீட்டிலதை உண்டோம்!

சிறிய கவி எனினுமது
செம்பாக மான
செப்பலுடை யதுமிகவும் சீர்மையுடையதுவே!

கருதியது கைகூடாக்
காலத்தும் கவிதை;
கைகூடும்! கைகூடும்! கைகூடும் தம்பி!

அரியவைகள், அரியவைகள்
அது எங்கள் மூச்சு!
ஆகட்டும் தொடர்ந்திடுக அனைவோரும் சுகமே!

அண்ணன்
நீலாவணன்

பெரியநீலாவணை - கல்முனை
8-8-66

'அரசு' தினகரனை மிக
அணியுரிதல் கண்டோம்.
அருளையா ஐயாவின் வீட்டிலதை உண்டோம்!

சிறிய கவி எனினுமது
செம்பாக மான
செப்பலுடை யதுமிகவும் சீர்மையுடையதுவே!

கருதியது கைகூடாக்
காலத்தும் கவிதை
கைகூடும், கைகூடும், கைகூடும் தம்பி!

அரியவைகள், அரியவைகள்,
அதுஎங்கள் மூச்சு!
ஆகட்டும் தொடர்ந்திடுக. அனைவோரும் [illegible]
அண்ணன்
- நீலாவணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சடாட்சரன் கவிதைகள்

சில மாதங்களுக்கு முன் எனது பழைய பைல்களைக் கிளறிக்கொண்டிருந்த போது ஒரு புதையல் அகப்பட்டது. சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு முன், 1960களின் தொடக்கத்தில், நான் இலக்கிய உலகுள் காலடி எடுத்துவைத்த ஆரம்ப காலத்தில், எனக்கு வந்த கடிதங்கள் அவை. நீலாவணன், மஹாகவி, அண்ணல் முதலிய எனது முன்னோடிக் கவிஞர்களின் கடிதங்களும் அவற்றுள் இருந்தன. நான் முற்றிலும் மறந்திருந்த, அண்ணலுக்கும் எனக்கும் இடையிலான கடிதப் போக்குவரத்து திடீரென நினைவுக்குவந்து என்னை வியப்பில் ஆழ்த்தியது. மருதூர்க் கொத்தன், மருதூர்க்கனி, பஸீல் காரியப்பர் ஆகிய இலக்கிய நண்பர்களின் கடிதங்களும் அவற்றுள் இருந்தன. அவற்றுள் அதிகமான கடிதங்கள் நண்பர் சடாட்சரனுடையது. தபாலட்டையும் கடிதங்களுமாக இருபது கிடைத்தன. 1963 முதல் 1965 வரை மூன்றாண்டு காலத்துள் எழுதப்பட்டவை அவை.

அக்கால கட்டத்தில் சடாட்சரன் கொழும்பிலும் இரத்தினபுரி மாவட்டத்திலும் பணியிலிருந்தார். 1963ல் கொள்ளுப்பிட்டி பகத்தல வீதியில் இருந்த நல்லொழுக்க சிறுவர் பரிபாலன சேவை திணைக்களத்தில் எழுதுவினைஞராகக் கடமையாற்றினார். 1964-66ல் பறக்கடுவையில் புசல்லை தமிழ் வித்தியாலயத்தில் ஆசிரியராகப் பணியாற்றினார். அதே காலகட்டத்தில், 1963, 64ல் நான் அட்டாளைச்சேனை ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் பயின்றுகொண்டிருந்தேன். 1965ல் பொலன்னறுவையில் ஆசிரியனாகப் பணியாற்றினேன். எங்களுக்கிடையில் இருந்த தூரமும், எங்கள் இளமைக்கால இலக்கிய ஆர்வமும் எங்களைக் கடிதங்கள் மூலம் இணைத்தன. அதற்குப் பின் எங்களுக்கிடையே கடிதத் தொடர்பு இருந்ததற்கான சுவடுகள் இல்லை. கடிதம் எழுதும் ஆர்வமும் பழக்கமும் குன்றிப்போனதுதான் அதற்குக் காரணம் என்று நினைக்கிறேன். ஒரு கடிதத்தில் அவர் இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறார்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உங்கள் கடிதம் கண்டு மகிழ்ந்தேன். அது கிடைக்கும்போது, எனது வகுப்பில் 'கடிதம் எழுதுதல்' இரண்டாம் முறையாகப் படிப்பிக்கும் வேளையாகையால், மாணவர்களும் பார்த்து – கடித உறுப்புகளை மனதில் நன்கு பதித்துக்கொள்ள உதவியாய் இருந்தது. நாம் அடிக்கடி நெஞ்சந் திறந்து இதுபோல் பரிமாறிக்கொள்வதால், உள்ளத்தில் அமைதி நிலவுவதோடு நமது வளர்ச்சிக்கும் பெருந்துணைபுரியும் என்று நம்புகிறேன்"

அதே கடிதத்தில் அடுத்த பந்தியில் பின்வருமாறு எழுதியிருக்கிறார்:

"இங்குள்ளவர்களின் தமிழ்ப் பற்றில்லாத செய்கைகளைக் கண்டு – றப்பர் மரங்களெல்லாம் மனம் நொந்து - இலையுதிர்த்து வெறுங் கம்புகளாகக் காட்சியளித்துக் கொண்டிருந்தது. ஆனால் நான் வந்ததும், என்னை அறிந்து சந்தோஷத்தினால் இலைகள் எல்லாம் துளிர்த்து ஆனந்தக் கீதம் இசைக்கத் தொடங்கிவிட்டது. முந்தநாள் இருந்து நல்ல தென்றற் காற்று - என் அறைக்குள்ளும் நுழைந்து இதம் தருகின்றது. நீங்கள் நினைப்பதுபோல், எல்லாம் வெற்றிச் சிகரங்களாய் ஒளிவீசும் காலம் தூரத்தில் இல்லை."

கொழும்பிலிருந்து பறக்கடுவைக்கு அவர் பணிமாறிச் சென்றது இலையுதிர் காலத்தில். 1964 பெப்ரவரியில் அவர் இந்தக் கடிதத்தை எழுதும் போது றப்பர் மரங்கள் தளிர்விடத் தொடங்கிவிட்டன. அது பற்றிய இளமைக்காலத் தன்னுணர்வோடு கூடிய அவரது தற்குறிப்பேற்றம் இப்போது படிக்கும்போதும் சுவையாக இருக்கிறது.

1963 நவம்பரில் அவர் கொழும்பில் இருந்தபோது எழுதிய கடிதத்தின் சில வரிகள் இவை:

"கடிதங்கள் வந்து கனிஇன்பம் தந்து கவலைகள் கொல்லும் பொழுதில் - தடித்தபை யோடு தபாற்காரன் நின்று தடவினான் என்றன் முகத்தை, எடும் என்ற போதே இலையென்றான் நெஞ்சில் எழுந்தது பொல்லா நெருப்பு – அடடா ஓர் அஞ்சல் ஐயாக்கு என்று அகமெலாம் செந்தேன் பொழிந்தான்! இந்த ஒரு புதிய உணர்வு ஏற்பட்டது உங்கள் கடிதத்தை வாங்கும் பொழுது. அதைப் படித்து முடித்ததும் நீரில்லாது காய்ந்த வயல் நல்ல ஓர் மழை பெற்றுப் பூரித்ததுபோல் தெம்பு பிறந்தது. இனிமேல் இப்படிக் காயவைக்க வேண்டாம்."

அதே கடிதத்தில் அவர் எழுதிய ஒரு தகவல் இன்று எனக்கு முக்கியமானதாகத் தோன்றுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நண்பா! அன்று ஒரு தபாலட்டை மிகவும் அவசரத்தில் எழுதினேன். அதன் கதையைக் கூறுகிறேன் கேளுங்கள். இங்கு ஒரு கழகத்தில் சரஸ்வதி பூசை. அதைப் பார்க்கலாம் என்று போன என்னை ஒரு புத்தகக் கடை அழைத்தது. அங்கு நுழைந்ததும் நல்ல கதைத் தொகுதிகள் என்னை எடும் என்னை எடும் என்று கூறியது. அதனால் கொஞ்சம் புத்தகங்களை எடுத்துவைத்துவிட்டு அடுத்த நாள் போனேன். ஏனென்றால் அன்று சம்பளம். அன்று ஒரு பத்துப் பனிரெண்டு ரூபாவுக்குப் புத்தகங்கள் வாங்கினேன். (இசையமுது – பாரதிதாசன் 2ம் தொகுதி - இனிப்பும் கரிப்பும் ஜெயகாந்தன். இரு சகோதரர்கள் - கு. அழகிரிசாமி – பிச்சமூர்த்தியின் கதைகள். குங்குமப் பூ - அப்பாஸ்) இன்னும் கொஞ்சப் புத்தகங்களை எடுத்து வைத்துவிட்டுத்தான் உங்களுக்கு எழுதினேன். ஏனென்றால் இருவரும் கலந்து படிக்கலாம் அல்லவா? அதன் பின்பு உங்கள் கடிதத்தைக் கண்டு ஒரு பத்து ரூபாய்க்குப் பின்வரும் புத்தகங்கள் வாங்கி வந்திருக்கிறேன். மாலை மயக்கம், கைவிலங்கு, ஒரு பிடிச் சோறு – ஜெயகாந்தன், புஸ்கின் கதைகள். முன்பு வாங்கியதைப் படித்து முடித்ததும் அனுப்புகிறேன். நீங்கள் படியுங்கள், அண்ணருக்கும் கொடுங்கள்."

அண்ணர் என்று இங்கு குறிப்பிடப்படுவது நிலாவணன். ஆரம்ப காலத்திலேயே எங்களுக்கு இருந்த வாசிப்பு ஆர்வத்தை இது காட்டுவது மட்டுமன்றி, பத்து ரூபாய்க்கு இவ்வளவு புத்தகங்களா என்ற மலைப்பையும் ஏற்படுத்துகின்றது. இன்று பத்து ரூபாய்க்கு ஒரு பத்திரிகை கூட வாங்க முடியாது. அன்று எங்கள் சம்பளமும் சுமார் 150 ரூபாய்தான்.

1964 அல்லது 1965ல் பறக்கடுவைக்குப் போய் நான் சடாட்சரனைச் சந்தித்தது, இருவரும் இரத்தினபுரிக்குப் போய் மு. தளைய சிங்கத்தைச் சந்தித்தது எல்லாம் இன்றும் என் நினைவில் உள்ளன.

நண்பர் சடாட்சரனை 1960ல் அல்லது 61ல் முதல்முதல் சந்தித்தேன். அப்போது அவர் மட்டக்களப்பு ஆசிரிய கலாசாலையில் பயிற்சி முடித்திருந்தார், அல்லது முடிக்கும் தறுவாயில் இருந்தார் என்று நினைக்கிறேன். அந்தக் காலத்தில் நாங்கள் தினமும் அல்லது அடிக்கடி சந்திப்போம். பெரும்பாலும் நீலாவணன் வீட்டில், நீலாவணைக் கடற்கரையில், அல்லது கல்முனைக் கடற்கரையில் அல்லது எங்கள் வீடுகளில் சந்திப்பு நிகழும்.

என்னுடைய முதல் கவிதை 1962ல்தான் பத்திரிகையில் வெளிவந்தது. 1950களின் இறுதியிலிருந்தே சடாட்சரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திரிகைகளில் எழுதத் தொடங்கிவிட்டார். அந்த வகையில் அவர் என்னைவிட மூத்த கவிஞர். வயதிலும் என்னைவிட அவர் நாலு வயது மூத்தவர். அவருடைய பல கவிதைகளுக்கு நான் முதல் வாசகனாக இருந்திருக்கிறேன்.

கடந்த அரை நூற்றாண்டுக்கு மேலாக அவர் கவிதை எழுதிவருகிறார். கல்முனைப் பிரதேசத்தில் மட்டுமன்றி முழு இலங்கையிலும் அவர் குறிப்பிடத் தக்க முக்கியமான கவிஞர்களுள் ஒருவர். என்றாலும் இதுவரை அவரது கவிதைத் தொகுதி ஒன்றேனும் வெளிவரவில்லை என்பது என் மனதை உறுத்திக்கொண்டே இருந்தது. இது கல்முனைப் பிரதேசத்தில் பல கவிஞர்களுக்கு நேர்ந்த அவலம். நீலாவணன் மறைந்த பிறகுதான் அவருடைய தொகுப்புகள் வெளிவர முடிந்தது. பாண்டியூரனும் தன் தொகுப்பு எதையும் காணாமலே மறைந்துவிட்டார். கல்முனைப் பிரதேசத்தில் ஒரு பதிப்பகத்தைத் தொடங்கி பலருடைய புத்தகங்களையும் வெளிக் கொண்டுவர வேண்டும் என்று நாங்கள் சிலர் நினைத்ததுண்டு. ஆனால் அது சாத்தியமாக வில்லை. காலம் பிந்தியாவது கவிஞர் நவாஸ் சௌபியின் ஆர்வத் தூண்டலினால் சடாட்சரனின் கவிதைத் தொகுதி ஒன்று வெளிவருவது மனநிறைவைத் தருகிறது.

சடாட்சரன் ஒரு கவிஞராகவே அறியப்பட்டவர். எனினும் அவர் அவ்வப்போது சில நல்ல சிறுகதைகளும் எழுதியிருக்கிறார். புதினைந்து கதைகள் எழுதியதாக அவர் சொல்கிறார். அவற்றுள் பதினொரு கதைகளைக் கொண்ட தொகுதி *மேட்டு நிலம்* என்ற பெயரில் புரவலர் ஹாஷிம் உமரின், புரவலர் புத்கப் பூங்கா வெளியீடாக 2009ல் வெளிவந்தது. ஒரு நல்ல கவிஞனின் முதல் நூலாக ஒரு சிறுகதைத் தொகுதி வெளிவந்தது ஒரு முரண்தான். என்றாலும் நீண்ட காலக் காத்திருப்பின் பின்னர் தனது நூல் ஒன்று வெளிவந்ததில் நண்பருக்கு ஓரளவு திருப்திதான். என்றாலும் இப்போது வெளிவரும் *பாதை புதிது* என்ற இக்கவிதைத் தொகுதி சடாட்சரனின் நண்பர்கள் அனைவருக்கும் மனநிறைவைத் தரும் என்று நம்புகிறேன்.

பாதை புதிது சடாட்சரனின் மிகச் சிறந்த கவிதைகளுள் ஒன்று. 1965ல் அது கி. வா. ஜகநாதன் ஆசிரியராக இருந்த கலைமகள் இதழில் வெளிவந்தது. அது வெளிப்படுத்தும் மனோபாவமும் அதன் கவித்துவ வீச்சும் அக்காலத்தில் எங்களைப் பரவசப்படுத்தின. அக்கவிதை பற்றி நான் அவருக்கு எழுதிய கடிதம் இன்னும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னிடம் இருப்பதாக சமீபத்தில் பேசிக்கொண்டிருந்தபோது சடாட்சரன் என்னிடம் சொன்னார். இப்போதும் அந்தக் கவிதை எனக்குப் புதிதாகவே இருக்கிறது.

போகின்றேன் பாதை புதிது
வழியெங்கும் வாகை மலர்கள்!
வளைந்த கதிர் வயல்கள்!
தாகம் அகற்றித்
தனி இன்பத் தேன்கனிகள்
வேகம் கொடுக்க,
விழிகள் வழிகண்டு
தோகை மயிலின் துயர்தீர் நடனத்தில்
தேகம் புளகமுறத்
தென்போடு நான்துணிந்து
போகின்றேன் பாதை புதிது!
வழியெங்கும் வாகை மலர்கள்
வளைந்த கதிர் வயல்கள்
.....

ஒரு புதிய உலகத்தை நோக்கிய ஒரு புதிய பாதையில் ஒரு புதிய பயணம் பற்றிய அழகிய கற்பனை இக்கவிதை. இக் கவிதை முழுவதையும் ஒரு குறியீடாகவே நாம் கொள்ள வேண்டும். புதிய பாதை, வாகை மலர்கள், கதிர் வயல்கள், தேன் கனிகள், மயிலின் துயர்தீர் நடனம் எல்லாமே குறியீடுகள்தான். வாகை மலர்கள் வெற்றியின் குறியீடு என்றால், கதிர் வயல்கள் வளத்தின் குறியீடு. ஏனையவை இன்பத்தின் குறியீடு.
கவிதை இவ்வாறு முடிகிறது:

ஓடுகிறேன்
நானுய்யும் உண்மை வழிமீதில்
தேடரிய செல்வம்
தினந்தோறும் வாழ்வுதர,
ஈடில்லாத் தென்றல்
எழுந்தென் உயிர்பேண
நாடிப் புதுநிலவும்
நட்போடு பாய்விரிக்க,
வாடி மலர்கின்ற வான்பூக்கள்
பூரித்துக் கூடிக் குதிக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குயிலோசை காதினிக்க,
ஓடுகிறேன் நானுய்யும்
உண்மை வழிமீதில்!
தேடரிய செல்வம்
தினந்தோறும் வாழ்வுதர!

கவிதை முழுவதையும் படித்து முடிக்கையில் இதுவே நமது இலட்சியக் கனவும் என நமக்கு ஒரு மன நிறைவு ஏற்படுகின்றது. கவிஞன் நம் எல்லோருக்குமாகக் கனவு காண்பவன் என்பது உண்மைதான். அவ்வகையில் சடாட்சரனின் கனவு நம் எல்லோருக்குமான கனவுதான். மகிழ்ச்சியும் இன்பமும் மனநிறைவும் அக்கனவின் சாரம். தனக்கென்று ஒரு புதிய பாதையை, மகிழ்ச்சியான பாதையை வேண்டும் யாரும் இக்கவிதையை அடிக்கடி படிக்கலாம், படித்துத் தன்னையும் புத்துயிர்ப்பிக்கலாம்.

சடாட்சரன் கடந்துவந்த பாதை, அவர் கனவு கண்ட மனோரம் மியமான புதிய பாதையல்ல. நாம் எல்லோரும் கடந்துவந்த கல்லும் முள்ளும் நிறைந்த, மேடும் பள்ளமுமான பாதைதான். அங்கங்கே சில நீர் நிலைகள், சில பூஞ்சோலைகள். அதுதான் யதார்த்த உலகின் நடைபாதை. அந்தப் பாதையில் நடந்த அவரது அநுபவங்கள் இந்தத் தொகுப்பில் பதிவாகியுள்ளன. பெரும்பாலான கவிதைகள் நமது யதார்த்த உலகின் அநுபவப் பதிவுகள்தான். அவற்றில் மகிழ்ச்சியை விட வலி அதிகம் இருக்கும். குறிப்பாக 1990க்குப் பிறகு அவர் எழுதிய கவிதைகளில் இந்த வலி மனதைப் பிசையும் வலியாக இருக்கிறது.

குழந்தை முகம் காட்டிக்
குதுகலித்த வானம்
திடீரென மப்புக் கட்டிற்று!
புன்னகைப் பொலிவில்லை

என்று தொடங்குகின்றது வதந்தி என்ற கவிதை. முதல் அடிகளிலேயே இருள் கவிந்த வாழ்வு படிமமாகிவிட்டது.

திகைத்து நின்றது தெருவில் எங்களூர்
வண்டிகளோ வாய்க்காலோ ஓடவில்லை
வயோதிபரும் நகரவில்லை!
வீதி அருகில் வெகுநேரம் நின்ற நான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயணத்தை இடை நிறுத்தி
வந்த வழி திரும்பினேன்!

இன்றைக்கும் காய்கறிதான் சமையல்
நாளைக்குச் சந்தையில்
நல்ல மீன் வாங்கி
நாவுக்கு ருசியாய்ச் சாப்பிடலாம்
தூரத்து உறவுகளும்
துயரத்தில் மூழ்கிற்று

விபரங்களில் வார்த்தைகளை விரயமாக்காது சூழல் பற்றிய சில இறுக்கமான படிமங்களை உருவாக்குவதன் மூலம் போர்ச் சூழலின் பயங்கரத்தையும் துயரத்தையும் இக்கவிதையில் வெளிப்படுத்துகிறார் சடாட்சரன். அநுபத்தைத் தன்மயமாக்கித் தருவது கவிதையின் வலியை செறிவுபடுத்துகின்றது.

இந்த நாட்களில் எங்கள் மண்ணில்
எத்தனை துயரங்களை விழுங்கி
ஊமையாய் வாழ்கிறோம்...?
ஓர் உயிரின் சீவியம்
இரு விரலால் கிள்ளி எடுக்கும்
மண்பருக்கை அளவிலும் சிறியதே (சீவியம் சிறிது)

ஒரு நொண்டிக் கோழியைக் கறிசமைத்து உண்ணும் போதுகூட சூழலின் யதார்த்தம் நினைவில் வந்து உறுத்துவதை இக்கவிதை வெளிப்படுத்துகின்றது.

பச்சை மரங்கள் இலை கருகிப்
பட்டழிந்து போனாலும்
தூதுவளை யாவது துளிர்த்துப் படரட்டும்
கடலும் இரங்கிக் கைநிறையக் கொட்டும்
நாற்று மேடைகளோ நாசம்
ஆழக் கிணற்றுள்ளும் அக்கினி பூக்கிறது

'ஆழக் கிணற்றுள் அக்கினி பூக்கும்' படிமம் சூழலின் குரூரத்தை உணர்த்தும் அருமையான படிமம். இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ள 1980க்குப் பின் அவர் எழுதிய இருபதுக்குச் சற்று அதிகமாக கவிதைகளில் பெரும்பாலானவை எதிர்பார்க்கக் கூடியதுபோல் போர்க்கால வாழ்வின் வலி உணர்த்தும் கவிதைகள்தான். போர்க்கால இலக்கியத்தில் சடாட்சரனின் பங்கும் குறிப்பிடத் தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1960களில் சடாட்சரன் ஏராளமாக எழுதினார் என்று நினைக்கிறேன். எனினும் இத்தொகுப்பில் அவரது ஆரம்பகாலக் கவிதைகள் பத்துக்குக் குறைவாகவே உள்ளன. இன்றைய வாசகர்களுக்கு அவை சுவைக்காதோ என்று அவர் நினைத்திருக்கலாம். நான் அப்படி நினைக்கவில்லை. ஒரு கவிஞனின் தனிப்பட்ட வளர்ச்சிப் படிகளை மட்டுமன்றி, ஈழத்துக் கவிதையின் வளர்ச்சிப் படிகளையும் அறிந்துகொள்வதற்கு அவை அவசியம்தான். அதிஷ்ட வசமாக அவரது ஆரம்பகாலக் காதல் கவிதைகள் சில இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. உபாயம் என்ன?, பற்றுக்கோல் தாராயோ, வாராயோ நெடு ரெயிலே, வாழ்க்கை இனிக்கிறது, துங்கா திருக்கிறேன், உதவி செய்க என்பன இத்தகையன. காதலில் உழலும் மென் உணர்வின் வலி இக்கவிதை வரிகளில் பின்னிக் கிடக்கின்றது. இரண்டு உதாரணங்களை மட்டும் இங்கு தருகின்றேன்:

காதலி உனது கருணை மழையில்
குளித்திடல் வேண்டிக்
குமைந்து கிடக்கிறேன்!
ஆசைக்குரிய அரசி
உன்னுடைய மாசிலா உருவம்
மனத்திரைக்குள்ளே வந்து
என்னை வாட்டி வருத்துதல் அறிவாய் (தூங்காதிருக்கின்றேன்)

உன் எழில் வதனம் ஒவ்வொரு நாளும்
என்முனே தோன்றி இடர் செய்கின்றதை
நீ உணராது நெருப்பேன் சொரிகிறாய்?
ஊமைபோல் இருந்தேன்
உழன்றிடச் செய்கிறாய்?
தங்க விளக்கே தயவாயக் கேட்கிறேன்
நீ எனைப் பார்த்துச் சிரிப்பதை விடுக
என்னுடன் இன்மொழி பேசுதல் தவிர்க்க!
(உதவி செய்க உத்தமி)

1970களில் ஈழத்தத் தமிழ் இலக்கியத்தில் இடதுசாரிச் சிந்தனை மேலோங்கி இருந்தது. கவிதையிலும் அதுவே பிரதான போக்காகக் காணப்பட்டது. இனப் பிளவும் சுரண்டலும் அற்ற ஒரு சமதர்ம சமூகத்தை நமது கவிஞர்கள் கனவு கண்டார்கள். சடாட்சரனும் இதற்கு விலக்கல்ல. கறுத்த மாடுகளே, வென்றிடுவோம். மண்ணிலே சொர்க்கம் மலர ஆகிய கவிதைகள் இத்தகையன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கறுத்த மாடுகள் கவிதையில் கறுத்த மாடுகள் அடிமைப்பட்ட மக்களின் குறியீடாக உள்ளன.

கண்கள் குளமாகி
நெஞ்சம் கனலாக
கசாப்புக் கடைக்காக
ஓடிஓடிப் போகும்
கறுத்த இளம் மாடுகளே காளைகளே
உங்கள் கழுத்திலுள நீள் கயிற்றை
மூச்சுப் பிடித்து முழுதாய் அறுத்தெறிவீர்!
மூர்க்கம் அடைந்தவனை மோதி
உடன் வீழ்திடுவீர்!

அக்கவிதையின் இந்த இறுதிவரிகள் அன்றைய இடதுசாரி உணர்வின் வெளிப்பாடாக இருந்தாலும் என்றைக்கும் பொதுவாக ஒடுக்கப்பட்ட மக்களின் எழுச்சியின் குரலாகவும் உள்ளன. வென்றிடுவோம் என்ற கவிதையும் இதுபோன்ற வெளிப்பாடே. அக்கவிதையில் போடியார் சுரண்டலின் சின்னமாக வருகிறார். அவரது வயற்காரன் சித்தன் சுரண்டப்படுவோரின் சின்னம். கவிதையின் கடைசி வரிகளில் விடுதலைக் குரல் பின்வருமாறு ஒலிக்கின்றது:

உனை அழிக்க,
எல்லாரும் நாங்கள் இணைந்து
ஒன்றாகப் போராடி
எல்லார்க்கும் எல்லாம்
இருக்கும் வழி அமைக்க
நாம் எழுந்துவிட்டோம் இந்நாடெங்கும்
வென்றிடுவோம்!

இனப் பிளவை மேவிய வர்க்க ஐக்கியமே சுரண்டப்படும் மக்களின் விடுதலைக்கான பாதை என்பது அன்றைய இடதுசாரிச் சிந்தனையின் மையக் கருத்தாக இருந்தது. இனத்துவவாதம் மேலோங்கிய இன்றையச் சூழலில் இக்கருத்து அர்த்தமற்றுப் போய்விட்டது என்று கருதமுடியாது. இனப் பிளவு யதார்த்தமாக இருந்தாலும், வர்க்க ஐக்கியம் ஒரு இலட்சியக் கனவாக இன்றும் இருக்கிறது. மண்ணிலே சொர்க்கம் மலர என்ற சடாட்சரனின் கவிதையில் இந்த இலட்சியம் வலுவாக, மக்கள் எழுச்சிக் குரலாக ஒலிப்பதைக் கேட்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னுமின்னும் நாங்களிங்கே
ஏமாற்றப் படுவதுமேன்?
பொன்னா, கதிராமா, புஞ்சிபண்டா இஸ்மாயில்,
சின்னையா, ஆதம், ஜெயதிலக, காத்தமுத்து
எல்லாரும் ஒன்றாய் எழுங்கள் பெரும்படையாய்
நல்லார் நாமென்று
ஊர் நடத்திடுவார் முன்னேபோய்
"எங்களின் வீட்டில் இருளாட்சி செய்கையிலே
உங்களுக்கு மட்டும் ஒளிசேர ஞாயமென்ன?
இங்கிருப்பார் எல்லார்க்கும்
இன்ப ஒளி இல்லை எனில்,
பங்கம் நிகழும்! பகைவர் அழிவீர்கள்!
என்றோர் குரலில் எடுத்தியம்பிப் போராடி
பொன்னொளி எல்லார்க்கும்
பொது உடைமை ஆக்கி வைத்து
இம் மண்ணிலே
சொர்க்கம் மலர வழி அமைப்போம் (மண்ணிலே சொர்க்கம் மலர)

சமூகப் புன்மைகள் ஒழிந்து, இன மோதலும் முரண்பாடும் மறைந்து, அன்பும், இன்பமும், வளமும் நிறைந்து பொலியும் ஒரு சுவர்க்கத்தை இம்மண்ணில் காண விழையும் மனம் சடாட்சரனுடையது. அந்த மனதின் உணர்வுகள்தான் அவரது கவிதைகள். அவை மானுடம் பாடும் கவிதைகள். பாதை புதிது கவிதையின் தொனிதான் அவரது முழுக் கவிதைகளின் தொனியும் என்பதை நான் அழுத்திக் கூறலாம். காலம் தாழ்த்தியாவது அவரது தேர்ந்த கவிதைகள் சில ஒரு தொகுப்பாக நமக்குக் கிடைப்பது மகிழ்ச்சியே. சடாட்சரனின் எல்லாக் கவிதைகளும் நூலுருப்பெற வேண்டும் என்பதே என் விருப்பம். அது விரைவில் நிறைவேறும் என்று நம்புகின்றேன்.

நட்புக்கருதி தன் கவிதைத் தொகுப்புக்கு முன்னுரை எழுதும் வாய்ப்பை எனக்களித்த நண்பருக்கு நன்றி.

நலத்துடன் வாழ்ந்து
நறுங்கவி பலப்பல தருக என் நண்பரே

**எம். ஏ. நுஃமான்**
*21. 10. 2012*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

ஈழத்து நவீன இலக்கிய வரலாறு பல்வேறு காரணங்களினால் தொகுப்புகள் வராத நிலையில் ஏற்கனவே எழுதி முடித்துவிட்ட எழுதிவருகின்ற படைப்பாளிகள் பலரை இழந்து வந்துள்ளது. "பெயர்" அளவில் அறியப்பட்ட பேரளவிலான படைப்பாளர் களையும் பெயரளவிற்கு கூட அறியப்படாத படைப்பாளிகளையும் பெற்றுவந்துள்ளது ஆரோக்கியமற்ற இவ்விருவகையான நிலமைகளுக்கும் இத்தொகுப்பின் ஆசிரியரான மு.சடாட்சரன் சிறந்த உதாரணமாகின்றார். சிறுகதை எழுத்தாளர் என்ற விதத்தில் அறியப்படாதவர் "மேட்டுநிலம்" தொகுப்பு வந்த பின்பே அறியப்படுகின்றார். கவிஞர் என்ற விதத்தில் பட்டியல் என்ற வரிசையில் ஒருவராக மட்டும் அறியப்பட்டிருந்தவர். இப்போது இத் தொகுப்பினுடாகவே உதாரண விளக்கமாகவும, சான்றா தாரமாகவும் துலக்க முறுகின்றார்.இவ்விதத்தில் இத்தொகுப்பின் வரவு கவனத்திற்குரியது.

காலங்கடந்த பின்னரேதான் தமது தொகுப்பினை வெளியிடுகின்ற வாய்ப்புக் கைகூடியிருப்பினும் அவ்வேளையில் கூட அத்தகைய படைப்பாளர்கள் பலர் தமது தொகுப்பினை வெளியிடுவதற்கு தயக்கம் காட்டி வருகின்றனர். இக்கவிஞர் இத்தொகுப்பினை வெளியயிட முன் வந்திருப்பது பாராட்டிற்குரியது. ஏனெனில் இத்தொகுப்பின் வரவிற்கான தேவையுள்ளது.

ஈழத்து நவீன கவிதை முன்னோடிகளுள் முக்கியமான வரும் மட்டக்களப்பு (அம்பாரை) மாவட்டத்தில் தம்மைத் தொடர்ந்துவந்த கவிஞர் குழாத்தினை இனங்கண்டு ஊக்கப்படுத்தியவராகவுமுள்ள கவிஞர் நீலாவணது பண்ணையிலே உருவானவர் கவிஞர் மு.சடாட்சரன். இந்நிலையில் நீலாவணன் அமைந்த பாதையில் சென்றவராகவும் கால ஓட்டத்தில் அப்பாதையிலிருந்து விலகி புதிய பாதையில் நடைபயின்றவராகவும் இக்கவிஞர் காணப்படுகின்றார? ஏன்பதே இவ்வேளை எம்முன்னுள்ள கேள்வி ஆகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏறத்தாழ எழுபதுகள் வரை ஈழத்து கவிதைப் பரப்பிலே நீலாவணன்செல்வாக்கு நிலவியுள்ளது. அறுபதுகளிலே கவிதை உலகிலே பிரவேசித்த மு.சடாட்சரன் எழுபதுகள் வரை எழுதியவற்றுள் ஏறத்தாழ பதினைந்து கவிதைகள் மட்டுமே இத்தொகுப்பில் உள்ளன. இவை உள்ளடக்க ரீதியில் நீலாவணன் போன்றே இயற்கை மனித உறவுகள் (காதல், நட்பு, பாசம்) சமுகப் பிரச்சினைகள் சார்ந்தனவாகவுள்ளன.

காதல் பற்றிய நீலாவணன் கவிதைகள் பலவும் அணிப்பிரயோகம் சந்தம், ஓசைப்பாங்கு, வர்ணனை முதலான பண்புகளைப் பெற்றிருப்பவை. மாறாக இவரது காதற் கவிதைகள் வெகு இயல்பான முறையிலான உணர்ச்சி வெளிப்பாடு, மொழிப் பிரயோகம் முதலானவற்றைப் பெற்றுள்ளன. சிறந்த உதாரணங்களாக 'தூங்காதிருக்கின்றேன், உதவி செய்க உத்தமி' முதலியன உள்ளன. மேலும் நீலாவணன் காணாத காதல் உலகங்களையும் இக்கவிஞர் காண்பது குறிப்பிடத்தக்கது. உதாரணம் (சுழல்வட்டம்)

இயற்கை சார்ந்த ஆரம்பகால கவிதைகள் ஒன்று மட்டுமே 'அரசு' இத்தொகுப்பிலுள்ளது. இக்கவிதையும் மேற்குறிப்பிட்ட இயல்பு களோடு தான் வெளிப்பட்டுள்து.

சமூகப் பிரச்சினைகள் பலவற்றை கையாண்டவர் நீலாவணன் சடாட்சரனின் இத் தொகுப்பில் அத்தகைய கவிதைகள் அரிதே. சமூகத்தில் நடமாடும் காதற் போலிகள், சீதனம் சார்ந்த விடயங்களில் கவிஞர் கவனம் சென்றுள்ளது.

சமூக ஏற்றத்தாழ்வுகள் பற்றி சிறந்த கவிதை புனைந்தவர் நீலாவணன். இவ்வழியில் சடாட்சரன் எழுதிய கவிதைகளும் சிறப்பானவை. (எ-டு வென்றிடுவோம், மண்ணிலே சொர்க்கம் மலர)

நீலாவணன் இயற்கை எய்திய பின்னர் ஈழத்து கவிதைப் போக்கு உள்ளடக்க ரீதியில் இன்னொரு தடத்திலே செல்ல ஆரம்பித்தமை யாமறிந்ததே. ஆரம்பத்தில் பேரினவாத ஒடுக்குமுறை இ ஆயுதப்போராட்டம், போர்க்கால வாழ்க்கை என்பனவும் என்பதுகளின் பிற்பகுதியிலிருந்து பெண் நிலை வாதப் பார்வை புகலிட அனுபவப்பகிர்வு ஆகியனவும் கவிப்பொருளாகின. இறுதியாக குறிப்பிட்ட விடயங்கள் மட்டக்களப்பு (அம்பாரை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்ட கவிஞர்களது கவனத்தை ஈர்க்கவில்லை. அதற்கான சூழலும் இருக்கவில்லை.

மேலே ஆரம்பத்தில் குறிப்பிட்ட விடயங்கள் ஓரளவு எழுதப்பட்டிருப்பினும் தொகுப்புருப் பெற்றவை குறைவே. எனினும் இக்கவிஞர் அத்தகைய விடயங்கள் சார்ந்த கவிதைகள் பலவற்றை எழுதி இருப்பது மட்டுமன்றி அவை தனித்துவமான முறையிலும் வெளியிடப்பட்டுள்ளமையும் இத் தொகுப்பு வெளிப்படுத்துகின்றது. அதாவது போர்க்கால, பேரினவாத ஒடுக்குமுறைக்கால வாழ்வியல் அன்றாட – நாளாந்த வாழ்க்கை அனுபவங்கள் ஊடாக பதிவு செய்யப்பட்டிருப்பதே அவற்றின் சிறப்பம்சமாகின்றது. தகுந்த உதாரணமாக அமைகின்றது பின்வரும் கவிதை 'விடியும் வேளை

எண்பதுகளின் பின்னர் இக்கவிஞர் எழுதிய இயற்கை சார்ந்த கவிதைகளும் நீலாவணன் காலத்து அத்தகைய கவிதைகளிலிருந்து வேறுபட்டவை. "மண்தந்த பிள்ளை" இன்று முக்கியம் பெறுகின்ற 'சூழலியல்' பார்வைக்கு முக்கியம் தருகின்றது. 'வெள்ளக்காடு' இயற்கையின் இயல்பினை மட்டுமன்றி சமகால வாழ்வியற் சூழலையும் இ மாற்றமுற்ற மனித நாகரீகத்தின் 'மாட்சி' யையும் அழகாக வெளிப்படுத்துகின்றது. முழுமையாக அதனை எடுத்தாழ்வது பொருத்தமானது 'வெள்ளக்காடு'

மிக அண்மைக்கால வாழ்வியலைப் பூடகமாக வெளிப்படுத்தவும் இயற்கை கவிஞருக்கு கைகொடுத்திருப்பதனை பின்வரும் கவிதை காட்டுகின்றது 'வசந்தம் நிலைத்திட'.

பாவடிவிலே வெண்பா விருத்தம் சிந்து விகற்பங்கள் பலவற்றைக் கையாண்டவர் நீலாவணன். சடாட்சரன் அவற்றை அதிகமாகக் கையாண்டவர் அல்லர் மாறாக அகவற்பா வடிவத்தினை அதிகம் கையாண்டிருப்பதோடு நீலாவணன் போன்று உணர்ச்சி அழுத்தங்களுக்கேற்ப செய்யுள் அடி அமைப்புகளை மாற்றி எழுதியுமுள்ளார். பேச்சோசைப் பாங்கினையும் பின்பற்றியுள்ளார். மரபு ரீதியான வெளிப்பாட்டு முறையினை மேன்மேலும் நெகிழ்வடையச் செய்து "புதுக்கவிதை"யை அண்மித்துசெல்கின்ற வெளிப்பாட்டுமுறையையும் கடைபிடித்துள்ளார்.

சுருங்கக் கூறின் கவிஞர் சடாட்சரன் நீலாவணன் தடமமைத்த பாதையிலே நடைபயில தொடங்கிய அதே வேளையில், கால ஓட்டங்களுக்கேற்ப பாதை புதிதாக்கிச் சென்றிருப்பதையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூத்ததலை முறைக் கவிஞராயினும், புதிய தலைமுறை கவிஞர்களோடு இணைந்து நடை பயின்று வந்திருப்பதையும் இத்தொகுப்பு வெளிப்படுத்துகின்றது என்று துணிந்து கூறலாம்.

பாராட்டுக்களுடன்

**பேராசிரியர் செ. யோகராசா**

மொழித்துறை கிழக்கு பல்கலைக்கழகம்

*2012.10.20*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்னுரை

எனது "மேட்டுநிலம்" சிறுகதைத் தொகுதி புரவலர் புத்தகப் பூங்கா வெளியீடாக2029 ல் வெளிவந்து பலரது கவனத்தையும் பெற்றுள்ளதோடு, கிழக்கு மாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சின் இலக்கிய நூலுக்கான பரிசையும் பெற்றுள்ளது.

நீண்ட நாளைக்குப் பிறகு என் 'பாதை புதிது' கவிதை தொகுதியை இவ்வாண்டு *(2012)*ல் வெளியிடுவதற்கு நம்பிக்கையை தந்த இறைவனுக்கும், ஆர்வத்தை வளர்த்த இலக்கிய நண்பர்கள், ரசிகர்கள் ஆகியோருக்கும் முதலில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆழக்கடலும், அழகு வயல் வெளியும் வாழத்துனை புரியும் எங்கள் வற்றாக் கிழக்கிலங்கை எங்கும் இயல்பாகவே கவிதை ஊற்றெடுத்துப் பொலியும். அவ்விதம் என் நெஞ்சில் சுரந்து நிறைந்த கவிதைகளில் நாற்பத்திரண்டைத் தெரிந்து இத்தொகுதியில் சேர்ந்திருக்கிறேன். இவை என்னை எடுத்துக் காட்டும்.

நமது நாட்டில் தமிழ் எழுத்தாளர்கள் தமது இலக்கிய ஆக்கங்களை நூலாக வெளியிடுவது மிகுந்த சிரம சாத்தியமாகவே உள்ளது. கவிதை, சிறுகதை, நாவல் என்பவற்றை எழுதிப் பத்திரிகைகளில் பிரசுரிப்பதற்கு ஒரு எழுத்தாளன் பிரயாசைப்பட வேண்டும். அதன் பின் அவற்றைச் சிறந்த முறையில் நூலாகப் பதிப்பித்தல் வெளியிடல், விற்பனை செய்தல், பரந்த அளவில் நூல்களை வாசகர் கரங்களில் சென்றடையச்செய்தல், போன்ற முயற்சிகளிலும் மும்முரமாக ஈடுபட வேண்டும். அவ்விதம் உழைத்தே நூலுக்கான முதலீட்டையும் பெற்றுத் தனது அடுத்த புத்தகத்தையும் வெளியிட முடியும். வெளியீட்டு நிறுவனங்கள் எழுத்தாளரிடம் நூல்களை விலைக்கு வாங்கி வெளியிடுகின்ற நிலைமை இன்னும் இங்கே வரவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதலால் நமது இலக்கிய ரசிகர்கள் பெருமனதோடு நூலாசிரியர் களுக்கு உதவ வேண்டும். அப்போதுதான் ஈழத்து தமிழ் இலக்கியம் பூரண வளர்ச்சி அடையும். உச்சமான நவீன இலக்கியங்கள்தோன்றி உலகில் இடம் பிடிக்கும். செம்மொழியான தமிழும் செழித்து வளம் பெறும்! வாழும்!

கவிதைக்கு எந்தக் கட்டுப் பாடுகளும் நலம் தராது. காலத்துக்கு காலம் மாற்றம் பெற்று வளர்நிலை அடைய வேண்டும். எந்தக் கலைக்கும் இது பொருந்தும். வெள்ளம் போல் பொங்கிப் பரவி வளம் சேர்த்து விளைச்சல்கள் பொலியச் செய்வதே சிறப்பு.

ஒவ்வொருவரும் தங்களின் ஆளுமைக்கும், ரசனைக்கும், வல்லமைக்கும் ஏற்ப புரிந்து கொண்ட விதத்தில் கவிதை உலகில் பயணிக்கினறனர் - நடைபயில்கின்றனர். என்னைப் பொறுத்த வரையில் அழகையும் ஆவேசத்தையும் கற்பனையோடு உணர்ச்சிப் பூர்வமாகவும் வெளியிடும் உன்னதவரிகளே கவிதை என்பேன். இவ்விதமான கவிதைகள் இந்த நூலிலே அடங்கியுள்ளன.

நான் கவிஞர் நீலாவணன் அவர்களோடு அறுபதுகளில் இருந்து ஏறக்குறைய பதினாலு ஆண்டுகள் நெருங்கிப் பழகி இருக்கிறேன். புதினான்கு ஆண்டுகள் இலக்கிய உலகில் மிகப் பெறுமதியான காலம்தான். அவரிடமிருந்து கவிதை, கலை, இலக்கியம் பற்றி எங்கள் கவிஞர்கள் கூட்டத்தோடு சேர்ந்து படித்திருக்கிறேன். அவர் எனக்கு மறக்க முடியாத வழிகாட்டியாவார். அறுபத்தாறில் நான் எழுதி தினகரனில் வெளிவந்த 'அரசு' எனும் கவிதையைப் படித்துச் சுவைத்ததும் அவர்எனக்கு மனமுவந்து எழுதி அனுப்பிய இதய வாழ்த்தை வைத்திருந்து அதன் நிழற் பிரதியை இத்தொகுப்பிலே சேர்த்துள்ளேன். அது எனக்கு ஊக்கம் தருவதோடு மகிழ்ச்சியையும் தருகின்றது அவருக்கு எனது நன்றி.

ஒரு கவிஞனையோ எழுத்தாளனையோ அவனுடைய அனைத்து படைப்புக்களையும் படித்தறிந்த பின்பே முழுமையாக கணிப்பீடு செய்து கூறுவது பொருத்தமாகும். எனினும் ஒரு கவிஞனை இனங்காட்டவோ அவனை வாழச் செய்யவோ ஒருசில கவிதை களும் போதும். அவ்விதம் என்னை அடையாளம் காட்டக்கூடிய கவிதைகள் இத்தொகுப்பில் அதிகம் உள்ளன. இன்னும் வெளிவரவும் இருக்கின்றன.

இத்தொகுதிக்கு எனது அன்புக்குரிய நண்பர்களும் தமிழ்கூறும் நல்லுலகெங்கும் அறியப்பட்ட விமர்சகர்களும் ஆகிய இரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்துறை பேராசிரியர்கள் அணிந்துரை எழுதியிருக்கிறார்கள். எனது நீண்டநாள் ஆசைஒன்று நிறைவேறியுள்ளது.

பேராசிரியர் எம்.ஏ. நு:.மான் அவர்கள் என்னைப் பற்றிய இனிய நினைவுகளை கட்டிக்காத்து வைத்திருந்து சுவைபடச் சொல்லி எனது கவிதைகளை தெளிவாக அடையாளம் காட்டி அணிந்துரை எழுதிச் சிறப்பித்துள்ளார்கள் அவர்கட்கு என் இதயம் கனிந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

பேராசிரியர் செ. யோகராசா அவர்கள் எனது கவிதை நூல் வெளிவர வேண்டும் என்று பலமுறை என்னைத் தூண்டியவர் காணும்போதெல்லாம் அதையும் கேட்பார். இந்நூலைச் சிரமம் பார்க்காது ஆழ்ந்த நோக்கில் அணிந்துரை எழுதி சிறப்பித்துள்ளார் அவர்கட்கும் என் இதயத்தின் நன்றிகள் உரித்தாகட்டும்.

இந்நூலைக் கவர்ச்சியான அட்டைப்படத்தோடு சிறந்தமுறையில் பதிப்பித்து உதவிய கவிஞர் நவாஸ் சௌபி அவர்களுக்கும் எழுத்து வடிவமைத்த எம் . ஐ. எப். சஜினாஸ் அவர்களுக்கும், நவீனன் வெளியீட்டகத்துக்கும் என் இதயம் கனிந்த நன்றியைக் தெரிவித்துக் கொள்கிறேன்.

குறிப்பாக எனது கவிதைகளை அவ்வப்போது வாரஇதழ்கள், சஞ்சிகைகளில் விரும்பிப் பிரசுரித்த பத்திரிகைகளின் ஆசிரியர் களுக்கும், எனது இலக்கிய வாழ்வுக்கு உறுதுணையாயிருக்கும் மனைவி, மக்களுக்கும், எனது அன்பு நண்பர்களுக்கும், உறவிணர் களுக்கும் நன்றி உரித்தாகட்டும்.

இனி எனது "பாதை புதிது" கவிதைகளைப் படித்துச் சுவையுங்கள் கருத்துக்களை கூறுங்கள்.

நன்றி

அன்புடன்

**மு.சடாட்சரன்**

ஓய்வு பெற்ற உதவிக்கல்விப் பணிப்பாளர்
பிரதான வீதி
பெரியநீலாவணை 1
கல்முனை - இலங்கை
*6.10.2012*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெட்டகம்

அரசு -01 வதந்திகள் - 02 / சீவியம் சிறியது - 03 எழுதுகிறேன் - 05 / பாதை புதிது - 07 / மீண்டு வருவாயா - 09 / வீரம் - 11 / விடியும் வேளை - 12 பேரிழப்பு - 13 / அகவிம்பம் - 14 / கடமையை மறந்தால் - 15 / கிணற்றடி வாழை - 17 / காய்மனம் - 18 / மாரி பொழியட்டும் - 20 / வெள்ளக் காடு - 21 / மண் தந்த பிள்ளை - 22 / வசந்தம் நிலைத்திட - 24 / நேசி - 25 கறுத்த மாடுகளே - 26 / புதிய பிறப்பெடு - 28 வென்றிடுவோம் - 29 / மண்ணிலே சொர்க்கம் மலர - 31 / தூங்காதிருக்கின்றேன் - 33 / உதவி செய்க உத்தமி - 35 / வெற்றிகள் மலியும் - 37 / தவிப்பும் தேடலும் - 38 / உயிர் பிழைக்க - 39 / உபாயம் என்ன? - 40 / பற்றுகோல் தாராயோ? - 42 / வாராயோ நெடுரெயிலே - 44 / வாழ்க்கை இனிக்கிறது - 47 முகமூடி கிழிகிறது - 49 / கொல்லா இல்லாத தோணிகள் - 52 / வளம் சேர்ப்போம் - 53 / சிறகு முளைத்த பறவை - 54 / மடிகிறது உயிர் - 56 ஆசிரியர் இல்லை எனில் - 57 / காட்டுத் தீ - 60 / ஒரு மழை நாள் - 63 / சுழல் வட்டம் - 66 / பங்கமில்லாது வாழ்வோம் - 69 / ஓயாத எரிமலை - 70

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசு

செந்நெல் விளைந்து செழுமை பரப்புகிற
என் நிலத்தைக் கல்லி
இளைய அரசங் கன்றொன்று
நான் நட்டேன்!
உயிராய் அதைப் பேணி,
ஆடு மாடு ஒன்றும்
அதம் செய்து அழிக்காது,
கூடொன்று கட்டிக்,
குளிர் நிழலும் உண்டாக்கி,
நாள்தோறும்
நீர்வாத்து வந்தேன் நயம் காண!......

பல்லாண்டு செல்லப் பருத்து
கிளை பரப்பி,
கொல்லும் விலங்கினங்கள் கூடி
மகிழ்ந்தாறிச்
செல்லத் தகுந்த சிறப்பாய்!
கொடும் வெயிலை
வெல்லும் குடையாய்!
வினைதீர்க்கும் நல்விருந்தாய்!
எல்லா உயிர்கட்கும்
இன்பம் பயப்பதுவாய்
நல்லோரின் செல்வம் போல்!
நாளும் பொலிவாக
நிற்கிறதிப் பாரில் நிமிர்ந்து!

பெருமழைக்கும்,
வெற்பைப் பெயர்க்கும்
வெறி கொண்ட காற்றுக்கும்,
மிண்டு கொடுக்கிறது!
மேன்மைக் குரியதிது!
அண்டினோர் வாழ்த்தும் அரசு!

தினகரன் 66



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வதந்திகள்

குழந்தை முகம் காட்டிக்
குதுகலித்த வானம்
திடீரென மப்புக் கட்டிற்று!
புன்னகைப் பொலிவில்லை!

காற்றுத் தோழன் பிடித்து விளையாடிய
சுருள்முடி;
கம்பி வலையாய்
கருக்கென்று அசையா திருக்கிறது!
என்ன நடந்ததோ?
என் இனிய கன்னிக்கு!
புதிராய் இருக்கிறதே!...

பாறாங்கல்லைப் போடப் போட
தீப்பொறிகள் எழும்பி
முகம் வீங்கிப் போயிற்றாள்;
சொற்ப நேரத்தில்!

திகைத்து நின்றது தெருவில் எங்களூர்!
வண்டிகளோ வாய்க்காலோ ஓடவில்லை!
வயோதிபரும் நகரவில்லை!
வீதி அருகில் வெகுநேரம் நின்றநான்;
பயணத்தை இடைநிறுத்தி
வந்த வழியே திரும்பினேன்.

இன்றைக்கும் காய்கறிதான் சமையல்!
நாளைக்குச் சந்தையில்
நல்ல மீன் வாங்கி
நாவுக்கு ருசியாய் சாப்பிடலாம்!
தூரத்து உறவுகளும்
துயரத்தில் மூழ்கிற்று!

*சரிநிகர் 85*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சீவியம் சிறிது

கூட்டில் வாழ்ந்த கோழியில் ஒன்று
கொத்திக் கொத்திக் கிணற்றடிபோய்;
நீர்பருகித் தீன்கொஞ்சம் பொறுக்கிற்று.

நொண்டி விளையாடும் பிள்ளை போல்
ஒற்றை காலால் துள்ளி வந்து;
நடக்க முடியாமல்
தென்னம் பிள்ளையின் அருகில்
ஒற்றையாய் உறங்கும் அழுது!....
காலால் கிளறி இரை தேடாமல்
பார்க்கச் சகிக்கவில்லை!

காலுக்கு மஞ்சள் ஒத்தடம் போட்டு
சித்தாலேபையும் பூசினோம்!
பழைய காலைக் காணவே இல்லை!

நாலைந்து நாளாய் நடக்காமல் கிடக்கிறதே
இரண்டு காலில்
இளந்தாரியாய்த் திரிந்த சேவல்!
ஒற்றைக் காலால் ஊனக் கிழவனாகித்
தள்ளிப்போய் முகம் வாடி
மூலையில் தூங்கும்!

காலால் கிளறி இரை தேடாமல்;
என்ன செய்வது?

வெட்டிக் கறி சமைத்தால்
பிழையில்லை என்றாள்.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது கறியாகி
நேற்று எம்மில் கலந்து விட்டது
அந்தக் கோழியின் கதையும்
முற்றுப் பெற்றது!

இந்த நாட்களில் எங்களின் மண்ணில்
எத்தனை துயரங்களை விழுங்கி
ஊமையாய் வாழ்கிறோம்?...

ஓர் உயிரின் சீவியம்
இரு விரலால் கிள்ளி எடுக்கும்
மண்பருக்கை அளவிலும் சிறியதே!

களம் 98



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எழுதுகிறேன்

கையிலோர் பையில்லை!
காசு பணம் காரில்லை!
சேப்பிலே பாக்கர் பவுண்டனும்;
மேலில் மடிப்புக் குலையாத
பட்டு வேட்டி சால்வை
பிடிக்கக்குடை, மாலை இல்லை!
படிக்கிறேன்....

வீட்டிலே, றோட்டிலே, விளையாட்டரங்கிலே,
கோட்டில், கடையில்,
கூடிடும் நாட்டவர்
காட்டிடும் உண்மையைக்
காண்கிறேன் கண்களால்!

வீட்டில் மனைவியும் மக்களும் பட்டினி;
கடன் என்று கேட்கக்
கையால் கொடுத்தோன் நடக்கிறான்
நாளெலாம்!
நன்றி மறந்தோன்
கிடக்கிறான் வீதியில் கீழ்மைப் பழக்கம்;
நடக்கும் மனிதர்க்கே
நாணம் கொடுக்கிறான்...

வாடும் இனமாம் தமிழர் நாம் என்றவர்
கூடுகிறார் மன்றம்!
குலைகின்றார் மாறுகின்றார்!
நாடுகிறார் சாதியினை
நாய்போலும் மோப்பத்தால்!
சாடுவோம் என்றவர் சத்தியம் மூடுகிறார்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டத்தில் நின்றுநற் கொள்கை முழக்கினார்,
நாட்டத்தில் ஒன்றையும் கொள்கிலார்!
ஓட்டமாய்த்
தன் மக்கள் வாழ்ந்திடத் தன்கொள்கை
விற்றிடும் மன்னர்!
மடமையின் மாண்புளோர்!
கண்ணியம் காசுக்கு வாங்கக்
களஞ்சு விலை கேட்கும்
மாசின் உருவம்!
மனவெழுச்சி நல்கும்!
புயற்காற்றாய் நெஞ்சம் பொருமும்!

இவைகள் வயற்புறத்துக் காட்சியிலே
வந்து துயர்போக்கும்
பாவாய்ச் சுரக்கும் பல நாளாய் என் நெஞ்சில்!

காக்கத் தமிழைக் கருத்துடனே
சாவாமல்
வாழ வழிசெய்து வற்றா வளம்பெருக்கி
ஆள நமத்தினத்தோர் ஆறறிவால் நாளும்;
பழுதொன்றும் வாராமல்
பார்த்தென் இதயத்தால்
எழுதுகிறேன் காண்பீர் இனி!

சுதந்திரன் 62



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாதை புதிது

போகின்றேன் பாதை புதிது!
வழியெங்கும் வாகை மலர்கள்!
வளைந்த கதிர்வயல்கள்!
தாகம் அகற்றித்
தனி இன்பத் தேன்கனிகள்
வேகம் கொடுக்க;
விழிகள் வழிகண்டு
தோகை மயிலின் துயர்தீர் நடனத்தில்
தேகம் புளகமுறத்
தென்போடு நான் துணிந்து;
போகின்றேன் பாதை புதிது!

வழியெங்கும் வாகை மலர்கள்!
வளைந்த கதிர் வயல்கள்!

செல்கின்றேன்....
அன்பிற் சிரிக்கும் மலர்ப்பொய்கை!
கல்லில் நடந்து
கதை சொல்லும் நீளருவி!

வெல்லத் தமிழில்
வெறியேற்றும் யாழோசை
நல்லளிகள் பாடி,
நரம்பில் இதமேற்ற
வல்லோன் படைத்த வடிவில்
எனைமறந்து;
பொல்லாக் கவலை பொடியாகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்னெழும்பச்...
செல்கின்றேன்....
அன்பிற் சிரிக்கும் மலர்ப்பொய்கை!
கல்லில் நடந்து
கதை சொல்லும் நீளருவி!

ஓடுகிறேன்
நானுய்யும் உண்மை வழிமீதில்;
தேடரிய செல்வம்
தினந்தோறும் வாழ்வுதர!

ஈடில்லாத் தென்றல்
எழுந்தென் உயிர்பேண
நாடிப் புதுநிலவும்
நட்போடு பாய்விரிக்க;
வாடி மலர்கின்ற வான் பூக்கள்
பூரித்துக் கூடிக் குதிக்க;
குயிலோசை காதினிக்க
ஓடுகிறேன் நானுய்யும்
உண்மை வழிமீதில்....
தேடரிய செல்வம்
தினந்தோறும் வாழ்வுதர!

கலைமகள் 65



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டு வருவாயா?

அருமை மகனே; என் ஆசை உயிரே!
பூகம்பம் வெடித்ததும்
சில்லாங்கொட்டையாய்ச் சிதறினோம் நாங்கள்!
உறவினர் வீடு
ஒருசிலநாள் தஞ்சம் கொடுத்தது!
நிம்மதி தேய்பிறையாக
அங்கும் பிரளயம் வந்ததே!

நீ உயிரைக் கையில் பிடித்தாய்
என் கண்கள் மாரிக் குளமாக
இரவில் உறங்கச் சென்றாய் அடுத்தஊர்!
பின்னிரவில்
சுற்றிவளைத்த சுழிக்காற்றில் அள்ளுண்டு
வீதி அருகே வெயிலில் தீக்குளிக்கின்றாய்
என்ற செய்தி;
நெஞ்சில் நெருப்பு வைத்துச்
சுவாலை பொங்க
இறைவனைத் தொழுதவண்ணம்
ஓடிவந்தேன் உனைமீட்க;

வேலி போட்டது பேய்க் காற்று;
வெடித்து வீழ்ந்தது என் மனக்கோட்டை!
தலையில் விழுந்த அடி
ஊரெல்லாம் கேட்டிருக்கும்!
உனது; கருந்தாடி முகமும்
இளம் பனைமரம் நடப்பது போல்
நடையும் நிழலாடத்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினமும் கண்ணீர் மழையில் நனைகிறேன்....,
உன் தங்கைகளின் பெருமூச்சில்
ஈரம் காய்கிறது மகனே!

முப்பது மாதமாய் உன்னை நம்பியே
வாழ்கிறேன் என் ஆசை மகனே!
சிறு வயதில் தந்தையை இழந்த நீ
முறிந்து விழாமல்;
தழைத்து நிழல் தருவாயென்று
படாத பாடுபட்டுப் படிப்பித்தேன்.
சர்வகலாசாலை விடுதலைக்கு வீடுவந்த நீ;
சரியாக நாலுநாள் உண்ணவில்லை!
அச்சுழிக்காற்றில் நீ சிக்காதிருந்தால்;
வீக்கம் இல்லாத பீக்கொம் (B.COM) ஆகி
மங்கா விளக்கேற்றி
மகிழச்செய்திருப்பாய்!

இன்றும் அறுகைப் பிய்த்தெடுத்து;
ஒரு நேர உலையில் வைத்தேன்.
உன்னை நினைத்து!
பளிச்செனச் சிரிக்கிறாய்
பச்சை அறுகில்!
காணாமற் போனவர் பட்டியலில்
உன்னைச் சேர்த்து
நினைந்து நினைந்து
கண்ணீர் மழையில் நனைந்து கரைகிறேன்....
மீண்டு வருவாயா என்மகனே!

களம் 96



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீரம்

புண்ணிய மூர்த்தி
பொங்கல் விழாவில் வெட்டி வாங்கினார்!
கப்பலோட்டினோம்!
கடாரம் வென்றோம்!
கல்லும் ஏற்றினோம்!
உலகம் உய்ய உணவும் கொடுத்தோம்!
பயிர் வளர்த்தோம்!வெற்றிச் செயல்கள் மிகவும்
புரிந்தோம்!
வீரப் பரம்பரை நாங்களே என்று
வெட்டி விளாசினார்!
விருந்தும் உண்டார்!
வீடுவந்தார்! மாலையும் வந்தது!
விளக்கெரிந்தது! இருள்வழிந்தது!

நாய்கள் வளவு மூலையில்
நன்றாய்க் குரைத்தன!
விளக்கை அணைத்து
பாயை போட்டார் படுக்கத் தொடங்கினார்
ஏதோ சத்தம் இரைந்து கேட்டது....!

இருளில் வெளியே எழுந்து செல்வதா?
வேண்டவே வேண்டாம்!
விடிந்தால் எல்லாம் விளங்கும்.... என்று
கதவை பூட்டிக் கண்துயின்றாரே !

கனையாழி 71



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடியும் வேளை

வெடிச் சத்தங்கள் நெஞ்சில் உதைத்தன!
புகையை ஊதினேன்.
வெத்திலை பாக்கை வெட்டி தந்தாள்!
வீதியில் பைசிக்கிள்கள்
வேகமாய் ஓடின!

வானம் கறுத்துக் கண்ணீர் சொரிய
தேனீர்ப் பானை கொதிக்கும் இரைந்து!
இதயக் குமுறல்கள்... ஏக்கங்கள் எங்கும்!
கிணறுகளெல்லாம் பொங்கி எழுந்து
ஊரை எட்டிப் பார்க்க நினைக்கும்!
வினோ பாவின் கீதைப் பேருரை
கையில் இருந்து ஆறுதல் சொல்லும்!

பாம்பைக் கழுத்தில் அணிந்தவர்
எங்கள் கண்ணில் தெரிய
வெடிச் சத்தம் தொடரும் தொலைவில்!

புகையை இழுத்து ஊதினேன்.
புத்திரர் யாவரும் நடுங்கி மெலிந்து
சுவரை நம்பிப் போய்ப் படுக்கிறார்!

வெடிச்சத்தம் மீண்டும் தொடரும்.
கட்டிக் கிடக்கும் குட்டி நாயும்
வானைப் பார்த்து வீரமாய் குரைக்கும்!
விடியும் வேளை
விட்டு விட்டுப் படபடவென்று
அந்த வெடிச்சத்தம் கேட்கும்!

வீரகேசரி 93



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரிழப்பு

இன்று மாலை ஊரெல்லாம் ஒப்பாரி.
வானத் தாய்க்கும் மனம் உடைந்து போயிற்று!
நேற்று பகல்
முகத்திலே துயரம் மிகவழிய
அவள் பார்வை நெருப்பாய்ச் சுட்டது!

இன்று வீதியெல்லாம் வெள்ளம் வழிந்தோட
கண்ணீர் மழை உக்கிரமாய்ப் பெய்கிறது!

எங்கள் மண்ணில் பிரளயம் தொடர்வதால்
அடிக்கடி பேரிடிகள் கேட்பதால்;
வானத் தாய்க்கும் பொறுக்க முடியவில்லை!
எந்தத் தாய்தான்
இங்கே கண்ணிர் சொரியா திருக்கின்றாள்?
எல்லாத் தாய்க்கும் ஏக்கம் தான்!
எங்கும் பெரிய இழப்புத்தான்!

*2001*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அகவிம்பம்

சந்தை நடுவே
சனத்திரளின் மத்தியில்;
நீண்ட நேரம் இதயம் திறந்து காட்டினாய்!
நானும் அப்படியே!
இருவரும் ஒன்றிப்போய்
புது இராகங்கள் மீட்டினோம்!

கரத்தை இறுகப் பிடித்துக் கொண்டாய்;
வெகு நாட்களின் வெக்கை தணிய
விடாது மழை கொட்டியது.
நல்லமழை!
ஏன் இப்படி நடந்து கொண்டோம்?

அமைதி இழந்த அவசர சூழ்நிலை..
விற்பதும் வாங்குவதும் விரைந்தகம் போவதும்தான்!
வெங்காயம் மரக்கறி மீன் தேங்காய் வெற்றிலை
வியாபாரிகள் உலகமிது!

நாம் பேசிக் கலப்பதைக் கூர்ந்து பார்த்து
குறுஞ்சிரிப்போடு ரசித்தவர் அதிகம்!
அவ்வழியே போனவர் வந்தவர்
வியந்தே நோக்கினர்!

நாங்கள் ஆழமான அன்பு நண்பர்கள்!
மறுகணம் ஏதோ பைத்தியக்காரர்கள் என்று
அவர்களின் முகங்களில் மாறி மாறி
அகவிம்பங்கள் விழுவது கண்டேன்!
நாம்..பித்தர்களுந்தான்!
தமிழில்..! கவிதையில்..! கலையில்...!
இல்லையேல்...?
ஆழமான விடயங்களை எல்லாம்
இவ்விடத்தில் அலசுவோமா? எம்மை மறந்து?

மூன்றாவது மனிதன் 2001



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடமையை மறந்தால்

சொந்தவூர் சென்று
வீட்டுச் சுகம்பெறும் வாஞ்சையோடு;
சந்தைக்குப் போனேன்
ஏதும் சத்துள கனிகள் வாங்க!

முந்திவந்தவர் கை தோழில்
மூட்டையும் முடிச்சும் தூக்கி;
இன்புடன் வரவேற்றென்னை
ஏகினார் எறும்பு போலே!

போனதும் நாற்புறத்தும்
புதியன தேடும் வேளை;
தேனையும் வெல்லும் இன்பத்
தீன் பலாக் கனியைக் கண்டு;
வேணுமென்று அதற்குப்;
பேரம் வினவிநான் வைத்துவிட்டு,
வானவில் அழகு காட்டும்
வனிதையர் நடனம் பார்த்தேன்!

கடமையை மறந்து
காலம் கழிந்ததும் நெருப்பில் வேகும்;
மடையரில் ஒருவனாக,
மதியிழங் தங்கேநின்றேன்!

படுவானில் நின்ற வெய்யோன்
பனிவரை மஞ்சம் சேர்ந்தான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடக்கிறேன் இதயம் நொந்து,
நற்கனி ஒன்றும் காணேன்!

எல்லோரும் சென்று விட்டார்;
இளமையும் குலைந்து மாய
தொல்லிருள் சூழ்ந்து வாட்ட
துயரொடு நிற்கின்றேன் நான்!
வல்லமை இழந்தேன்.
போக வழியும் நான் காணேன்!
கையில் இல்லையே கனிகள் ஒன்றும்
எப்படி வீடு போவேன்?

தினகரன் 66



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிணற்றடி வாழை

கிணற்றடி வாழை
ஏழெட்டுத் தலைமுறையாய்த் தழைத்து
கெழியாது கெக்களிப்போடு நிற்கிறது!
அதன் அடியில் புதிய தலைமுறையோடு!

கண் அடைத்து ஈரல் கருகி
சொத்தை சுருங்கி சூத்தையாய் போகாது;
தேன் கனிகள் சொரிந்து
திளைக்க வைக்கிறது திசையெல்லாம்!

வெளியாரும் விரும்பி ஏற்று
பரீவோடு பசி தீர்க்கப்
பிரபல்யமானது.

விமர்சனக் காற்றுக்களுக்கு
அஞ்சி மனம் உடைந்து
முறிந்து விழுந்ததே கிடையாது!
ஆழமாய் முளைத்து
அடிபெருத்த அதிசய வாழை இது!

ஆவலுடன் அண்டை அயல் எல்லாம்
புகழ்பாடி வாழ்த்தி வரவேற்க;
நேராக நின்று
தன்நம்பிக்கையுடன்
கரம் அசைத்து முறுவல் பூக்கிறது!
முத்து முத்தான கனிகள் சொரிகிறது
ஊட்டம் நிறைந்த உயிர்சத்துக்களோடு!

வீரகேசரி 95



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காய்மனம்

கொழும்புக்கு போக வேண்டும்
கொஞ்சமாய் சோறுகட்டு!
வழிகளில் தொல்லை பார்த்தால்;
வாட்டங்கள் தீராது
என்று வெளிக்கிட்டேன்!

பிரிவை எண்ணி வேதனைப்பட்டாள்
சற்று விழிமலர் பனித்தாள்!
வெண்டி விரல்களை பிசைந்தாள்!
அன்புக் களைநிறை முகத்தாள்!
என்னைக் கனிவுடன் அனுப்பி வைத்தாள்!

புதுப் புதுக் கனவு
கண்ணுள் பூத்தன இரவுமுற்றும்!

வெது வெதுப்போடு எங்கள் வேக்குகள்
திறந்து மூடும்!
முதியவர் எனினும்;
சொந்த அடையாள அட்டை ஒடு
பதைத்துடன் இறங்க வேண்டும்!
பஸ் நிற்கும் இடங்கள் தோறும்!
பொதிகளை தூக்கித் தூக்கிப்
பொருமினோம் நனைந்து போனோம்!

ஒருபகல் மட்டும் நின்றேன்
ஓரிரு அலுவல் பார்த்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரபரப் பெங்கும்
மக்கள் பயத்தினால் இயங்குகின்றார்!
புறப்பட்டேன் போன பஸ்ஸில்!
போதும் நான் வந்ததென்றேன்!
உரிமையாய் மனம்திறந்தே;
உரையாட யாரும் இல்லை!
கருமேகம் படர்ந்த வானம்!
காய்மனம் நிறைதல் கண்டேன்!

வீரகேசரி 94



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாரி பொழியட்டும்

ஆணக்கிடாரம் கொதித்து வழிகிறது ..
ஆள் விழுங்கும் அக்கினிச் சுவாலையில்.
வெந்தழியும் உயிர்கீரைகள்!

முற்றுப் பெறாத அருங்கோடை;
முற்றமெலாம் எரிதணல் பரவி;
மடிந்து குவியும் ஜீவ மலைகள்!

மனங்குளிர மாரி பிறப்பதை,
தள்ளிப் போடுகிறது வானக் குடும்பம்;
அண்டத்துக் கோள்கள்
ஆரவாரம் செய்தும்!

பச்சை மரங்கள் இலை கருகிப்
பட்டழிந்து போனாலும்;
தூது வளையாவது துளிர்த்துப் படரட்டும்!
கடலும் இரங்கிக் கைநிறையக் கொட்டும்!
நாற்று மேடைகளோ நாசம்!
ஆழக் கிணற்றுள்ளும் அக்கினி பூக்கிறது!

வாழை தென்னை மாபலா மாதுளைகள்,
வதங்கிச் சவண்டு வடிவிழந்து அழுகின்றன!
கச்சான் காற்றும் கலக்கிக் குடித்திட்டான்!

இச்சைகளை இழந்த ஏக்கத்தில்
சாம்பலில் முளைத்த குஞ்சுகளைச்
சளிக் காய்ச்சல் கொல்கிறது!

மாரி பொழிய வழிவிடுங்கள் !
மனம் குளிர்ந்து மனிதம் மலர
காணிகளில் பொன்விளைந்து
காசுபணத் தோடிருக்க!

*2010*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெள்ளக் காடு

குண்டுகள் வெடித்துக்குலுங்கிய வானம்;
கீலம் கீலமாய் ஆகிற்றதா?
கொட்டு கொட்டெனக் கொட்டி,
இருவாரமாய்த் தொடர்ந்து,
குடியெழுப்பப் பெய்கிறது,
பூத மழை!

வடிகால் இல்லாத கொங்கிறீற் வீதிகள்,
உயர்ந்ததால்,
பெருங்குடிகாரன்போல்,
பேச்சுமூச்சின்றி வளவுக்குள் புகுந்து;
குப்புறக் கிடக்கிறது!
வீடு வாசல் எங்கும்! வெள்ளக்காடு!!

அடுத்தவன் வீடு அடியோடு வீழ்ந்தாலும்,
தன் வீடு மட்டும் வாழ்ந்தால் போதும்!
என்று துடிக்கும் துரியோதனர்கள்,
எங்கும் மலிந்து வழிகின்றார்!

பொதுவேலி மதிலின் அத்திவாரத்தின்கீழ்,
பெரிய நட்டுமைகள் தோண்டிவைத்து,
தன் வளவு வெள்ளத்தை
அசுப்பில்லாமல் நள்ளிரவில் அனுப்பிவிட்டுத்,
திருப்திகாணும் திருடர்கள் கூட்டத்தால்;
தொல்லைகள் ஆயிரம் நமக்கு!

விளைந்த வேளாண்மையும்,
முக்குளித்து மூச்சடைத்து;
பிணமாகிப் போகிறது வெள்ளத்தில்!

கூட்டுக்குள் அகப்பட்ட சிறுமீன்களாய்
குமுறி அழுகிறது எம்மூர்!
கேட்பார் யாரும் இல்லாத
கேட்டில் மனிதம் மடிவதா?

*2011 தினகரன்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மண் தந்த பிள்ளை

பச்சை உடை உடுத்து
பாட்டும் இசைத்து
எமது இச்சையைத் தூண்டும்
எழில் மாதர் உங்களையே;
மெச்சிப் புகழ்தல் மிடுக்கு !

வாசலில் மாமரம் வை!
என்றார் ஆசிரியர்.
ஆசையுடன் வைத்தேன்
அருள் மழை பெய்கிறது!
பாசம் வளர்க்கும் பயிர்!

சத்தான தேன்கனிகள்
தந்தெம்மைக் காக்கின்றீர்;
கத்தி எடுத்துங்கள்
கழுத்தறுக்கும் மூடர்கள்;
பித்தம் தெளிவடைதல் பேறு!

தென்னை இளங்கன்னி;
தெருவில் தலைநீட்டிப்
புன்னகைத்து -
நெஞ்சம் புளமுகறச் செய்கின்றாள்;
கண்ணாகப் பேணல் கடன்!

போற்றும் என் நெஞ்சம்
பொழுதெல்லாம்;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களது சோற்றில்
சுவையைச் சொரிகின்ற
உங்களை; நீர்;
ஊற்றி வளர்த்தல் உவப்பு!

வெட்டி அழிக்காது
விருப்போடே உங்கள் நலம்
காத்து வளர்ப்பேன்!
என் காதலியின் சொந்தம் நீர்!
மட்டில்லா இன்பம் மலர்!

இன்பமாய் பேசி;
இளமைதரும் சொந்தங்காள்!
விண்ணில் தவழ்கின்ற
வெண்முகிலைக் காதலிப்பீர்!
மண்தந்த பிள்ளை மரம்!

தினக்குரல் 2012



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வசந்தம் நிலைத்திட

வந்த வசந்தம்
வழிதவறிப் போய்விடுமா?
அனல் காற்று
மும்முரமாய் கொளுத்துகிறது.

மலரின் மடியில்
மொட்டுகளும்
மயக்கும் புதுத்தளிர்களும்
கருகி உதிரத் தொடங்குகின்றன.

முழு மனதின் நேசிப்புகள்
முடிந்து போக
தீ மூட்டிக் குளிர்காயும் வீறாப்புகள்!
விண்ணைத் தொடும் தீ நாக்குகள்!
கோரப் பசிக்கு மீண்டும் இரையாகுவதா?

கூரிய வேல் எடுத்து
குலையாத விளக்கேற்றுவோம்
வசந்தம் நிலைத்திட.

*தினக்குரல் 2011*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நேசி

மாலையில் பொங்கும் மனச்சுமை இறக்கிட
மூலையில் கிடக்கும் கதிரையில் அமர்ந்து நான்
பேனை எடுத்துப் பேப்பரில் எழுதினேன்!

ஓடி வந்து நீ உதுதா என்கிறாய்
ஆடி ஆடிஎன் ஆடையை பிய்க்கிறாய்
காந்தமான கண்கள் சோர்ந்திட
சாந்தி நல்கும் வதனமேன் வாடினாய்?

பார்த்த சாரதி என்அரும் பாலனே
நேர்த்தி யாகநீ பேனை பிடித்திடாய்
நெஞ்சின் ஊற்றை எழுதவும் செய்திடாய்!
எதுக்காகப் பேனையைக் கேட்கிறாய்?
பேருக்காக எழுதுதல் வேண்டுமா?

நீதிக் கெழுதும் நேர்மை கடைப்பிடி
சும்மா கோடும் சுழியும் எழுதினால்
உம்மை பற்றி ஊர்உலகு உணருமா?
அந்த எழுத்தால் அகிலம் சிறக்குமா?

நொந்து நொந்து நொடியும் மனிதரின்
சிந்தை மகிழச் சிறப்பு விளையுமா?

போமனே! வாழ்வில் பொறுமையாய் இரு!
தாய்மொழி கற்றுத் தகுந்த நூலுணர்!
ஊரில் உள்ள மக்களைக் கூர்ந்துபார்!
நேராய் அவர்களை நேசித்து
உழைத்து நீ ஆராய்ந்தெழுது
அவர்கள் அல்லல்கள் போக்கவே!
சீரும் புகழும் சேரும் உனக்கு!

71



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கறுத்த மாடுகளே

கண்கள் குளமாகி
நெஞ்சு கனலாக
கசாப்புக் கடைக்காக;
வெட்டி உரித்து விலைகூறும் கல்லறைக்கே
ஓடி ஓடிப் போகும்
கறுத்த இளம் மாடுகளே காளைகளே;
உங்கள் கழுத்திலுள நீள்கயிற்றை
முண்டி இழுத்தும்; ஓர் மூச்சுப் பிடித்தும்;
அறுக்கும் திராணி
உமக்கு அற்று விட்ட தேனோ?
விதி விதி என்றே நீர்
வெந்துகுமையாதீர்!

காலை மதியம் கருக்கல்
இரவு என்றே எண்ணாமல்
அந்த இருட்டு மனப்புச்சன்
கரத்தில் பெரியதொரு கம்பெடுத்துப்
பின்னால் அடித்து துரத்துகிறான்!

அந்தப் புலையனை
ஆர் என்று அறியீரோ?
ஆத்திரம் கொண்டு
அவன் கோத்திரத்தை எல்லாம்
குத்திக் கிழித்துக்
குழிகளிலே போடாமல்;
வீணே அடங்கி
விதியென்றுமாய்வதும் ஏன்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீனோடு நீரும்
தெரிந்தவன் ஊட்டுவதும்;
உன்னிலே
நல்ல உரிமை கொண்டாடுவதும்;
உன்னுடைய ஈரல்
உருசி அறியத்தான்!

மரத்துப் போய்ச்
சற்றும் மனவெழுச்சி கொள்ளாமல் ஓடுகிறாய்?
மானம் மிக இழந்த மாடே
உமை வெட்டி
நாளை பெரும் சந்தையிலே
நாறும்வரை விற்பான்!

காலை மதியம் கருக்கல்
இரவென்றே பார்க்காமல் கொல்வான்!
இருட்டு மனப் புச்சன்!

கண்கள் குளமாகி
நெஞ்சம் கணலாக
கசாப்புக் கடைக்காக
ஓடி ஓடிப் போகும்
கறுத்த இளம் மாடுகளே காளைகளே;
உங்கள் கழுத்திலுள நீள்கயிற்றை
மூச்சுப் பிடித்து முழுதாய் அறுத்தெறிவீர்!
மூர்க்கம் அடைந்தவனை மோதி
உடன் கொன்றிடுவீர்!

வயல் 85



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய பிறப்பெடு

கூனிக் கூட்டத்தில் கொழுத்து வந்த
கழுத்தறுத்தான் சேவலுக்கு இவ்வளவு திமிரா?
என் வாசலை மடுவாக்கிக் கூவுகிறாய்!..
கல்லெறிந்து கலைக்கமுன்
சொல்வதைக்கேள்!
சுயமாக சிந்தித்துப் பார்!

உன் கொட்டைப் பாக்குத் தலைக்குள்
முழுவதும் மண் என்றால்;
என் தலைவாசல் தானா உனக்குச் சம்பல்?

சந்தையில் விலைபோகாச் சரக்கே!
தேடுவாரற்றுத் தெருவில் கிடக்கும் பாண்துண்டே!
பாபத்துக்காகப் பழைய விதை நெல்லை
வாங்கி விதைத்து வளத்தையெல்லாம் வீணாக்கி;
நட்டத்தைச் சுமந்து;
நாளெல்லாம் வேதனையில் விழுந்துவிட,
சிந்தனை இல்லாச்
சிறுமதியோர் கூட்டத்தின்,
வாரிசாய் எனை எண்ணி வளையாதே;
போய் வங்காளக் கடலில் விழுந்து;
புதிய பிறப்பெடுத்து;
மறுமுறை வா மனிதப் பழமாக!

தினகரன் 2012



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வென்றிடுவோம்

ஐயா பெரியவரே
ஆதின பாதினங்கள் மெய்யாக உள்ளவரே;
மேல் நாட்டில் கல்விபெற
உன்னுடைய புத்திரரை
ஒவ்வொன்றாய்ப் போக்காட்டி;
இங்கே தொழிலாக்கி
ஏற்றமாய் வாழ்கின்றீர்!

இங்குவரும் எம்பிகளை;
பக்குவமாய்ப் பிடித்துப்
பாசாங்கும் காட்டுகிறீர்!

கூட்டுறவுச் சங்கக் கடைக்கு
நீ தலைவன்!
கோயில் நடத்தும் குழுவுக்கும் வண்ணக்கர்!
போட்டிக்குள் எங்களுக்குப்
போட்டபுது ஜே.பி.நீ!

வேளாண்மைச் செய்கை
விளைவுக் குழுத்தலைவர்!
ஆளாகி நீ பெரிய ஆட்டங்கள்
காட்டுகிறாய் !

காரோடு உழவுமெசின்
கல்வீடு தோணிவகை
யாருன்னைக் கேட்பவர்கள்?
யாவும் உனக்கேதான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தனையும் பெற்றுள்ள
எங்களூர்ப் போடியார் உன்;
சித்தன் வயற்காரன்
சீரழிந்து போவதும் ஏன்?
புத்தியின்றித் தீயில்
புழுப்போல் துடிப்பதும் ஏன்?

இம்முறையும் நல்விளைவாம்;
ஏக்கர் அறுபது கண்டதுவாம்;
என்றாலும்
கண்தாண்டு உடல் மெலிந்து
சித்தன் திரிகின்றான்!
சீழும் சிரங்கோடும்!
பெண்சாதி பிள்ளைகுட்டி
பேதலித்தே மாழ்கின்றார்!

இந்த நிலைமை அவர்க்கேன் ஐயா?
உன்னுடைய காணியிலே
ஓயாது கஸ்ரங்கள் பட்டானே;
தோணி வலைக்குமவன்
தோள் கொடுத்து வந்தானே;

எல்லாம் உனக்கு மட்டும்
எப்படி வந்ததையா?
ஏனையா எங்களை நீ
ஏப்பமிட்டு வாழ்கின்றாய்?
உன்னுடைய அக்கிரமம் ஓயாதா?
உனை அழிக்க
எல்லாரும் நாங்கள் இணைந்து
ஒன்றாய்ப் போராடி
எல்லார்க்கும் எல்லாம்
இருக்கும் வழி அமைக்க
நாம் எழுந்துவிட்டோம் இந்நாடெங்கும்
வென்றிடுவோம்!

மல்லிகை 73



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்ணிலே சொர்க்கம் மலர

மேற்கே போய்ச் சூரியன்
மெல்ல மறைகின்றான் !
காக்கைகள் தென்னையில் கத்திக் களைத்தன!
எங்களின் பாதை இருண்டே கிடக்கிறது!
எங்களின் வீடும் இருளில் தவிக்கிறது!

கல்லும் உருகிக் கரையும் வெயில் நடுவே,
மல்லுப் புரிந்து தினம் மாடாக நாமுழைத்தே;
ஓலைக் குடிசைக்குள் உண்டு களைப்பாற
வேலை முடித்து விருப்போடு நாம் வந்தோம்;
எங்களின் பாதை இருண்டு கிடக்கிறது!
எங்கள் வீடெல்லாம் இருளில் தவிக்கிறது!

சந்திக் கடைக்குச் சனங்களோடு போய்ச்சிறிது
மண்ணெய் விளக்கேற்ற வாங்கி வருகின்றேன்.
சின்ன விளக்கெடுத்தென் சீமாட்டி பற்றவைத்தாள்!
கண்ணிமைகள் மேலும் சுருங்கிக் கரிக்கிறதே!

மங்கல் வெளிச்சம் மலர்ந்தாலும் வீட்டுக்குள்
எங்கும் இருளே எமைஆட்சி செய்கையில்;
மேற்கிலுள வீதியிலே
மேல்மாடி ஏராளம்!
பார்க்குமிடந்தோறும்
அங்கே பால்போல் ஒளிவெள்ளம்!

மாளிகைக்குள் அங்கே மகான்கள் தமை மறந்து;
கேளிக்கை செய்து கிடப்பார் பூமஞ்சத்தில்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களின் பாதை இருண்டே கிடக்கிறது!
எங்கள் வீ டெல்லாம் இருளில் தவிக்கிறது!

இன்னுமின்னும் நாங்களிங்கே
ஏமாற்றப் படுவதுமேன்?
பொன்னா கதிராமா புஞ்சிபண்டா இஸ்மாயில்
சின்னையா ஆதம் ஜெயதிலக காத்தமுத்து;
எல்லாரும் ஒன்றாய் எழுங்கள் பெரும்படையாய்!

நல்லார் யாமென்று
ஊர் நடத்திடுவார் முன்னே போய்
எங்களின் வீட்டில் இருளாட்சி செய்கையிலே
உங்களுக்கு மட்டும் ஒளிசேர ஞாயமென்ன?
இங்கிருப்பார் எல்லார்க்கும்
இன்ப ஒளி இல்லை எனில்;
பங்கம் நிகழும் பகைவர் அழிவீர்கள்!
என்றோர் குரலில் எடுத்தியம்பிப் போராடி
பொன்னொளி எல்லார்க்கும்
பொது உடைமை ஆக்கி வைத்து
இம்மண்ணிலே
சொர்க்கம் மலர வழி அமைப்போம்!

சாகித்திய விழா மலர் 78



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தூங்காதிருக்கிறேன்

எங்களின் றேடியோ படித்து முடிந்தது .
வீட்டார் எல்லாம் விளக்கை அணைத்து
துயின்றுவிட்டனர்.!
தூங்காதிருக்கிறேன்!
தென்னை ஓலைகள் காற்றினுக்காடி
அசையும் ஓசையை அனுபவிக்கின்றேன்!

நாய்கள் எங்கோ குரைக்கும் சத்தமும்,
கடல் அலை ஓயாதடிக்கும் ஓசையும்;
நன்றாய்க் கேட்க நான் விழித்திருந்தே;
உன் திருமுகத்தை
நினைத்துப் பார்க்கிறேன்!

உன் இரு விழிகளின் ஒளியைக் காண்கிறேன்!
இரு விழியாலும் எனை நீ விழுங்கிட,
செவ்விதழ் விரித்துச் சிரித்த அழகினை
கண்ணுக்குள் நான் கண்டு மகிழ்கிறேன்!
உன் எழிலோடு திளைக்க முனைகிறேன்!

காதலி உன் கருனை மழையில்
குளித்திட வேண்டி
குமைந்து கிடக்கிறேன்!
ஆசைக்குரிய அரசி
உன்னுடைய மாசிலா உருவம்
மனத்திரைக்குள்ளே வந்து
எனை வாட்டி வருத்துதல் அறிவாய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊரெலாம் அடங்கி
உறங்குமிவ் வேளை
தென்னை ஓலை காற்றினுக்காடி
அசையும் ஓசையை அனுபவிக்கிறேன்.!
கடலின் அலைகள் கரையில் மோதி
தெறிக்கும் சத்தமும் தெரிந்துகொள்கிறேன்!

எங்கோ ஒருவர் இருமும் குரலும்
எங்கோ நாய்கள் குரைக்கும் சத்தமும்
நன்றாய்க் கேட்க நடுச்சாமத்தில்
நித்திரை இன்றி நெருப்புக் கட்டிலில்
உன் நினைவால் நான்
உறங்கா திருக்கிறேன்!

என்னைப் போலிவ்விரவு வேளையில்
நீயும் உறங்காதிருக்கின்றாயோ?
நினைத்து நினைத்து மெலிகின்றாயோ?
ஆசைக்குரிய அரசிவந் தென்னை
ஆளும் நாள்வரை அயரவே மாட்டேன்!

தினகரன் 72



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதவி செய்க உத்தமி

என் மனம் உன்னையே விரும்புகின்றது!
என்னையே நீ மிக விரும்பினாய் என்று
நீண்ட நாளாய் நினைத்து மெலிகிறேன்!

உன்னை முதல் முதல் கண்ட போதும்;
உனது விழியெனைத் தழுவிய போதும்;
உணர்வின் வலையுள் உபாதை அடைந்தேன்!
என்னை உன்னிடம் இழக்கவும் துணிந்தேன்.!

உனது நீண்ட விழிகள்
தினமும் எனைமிகப் பரிவுடன் நோக்கும்!
அவ்வேளைகள் தோறும்!
ஏழை நான்;
இனிய அறுசுவை விருந்தை
அள்ளிச் சுவைப்பேன்!
அகத்திலோர் கோட்டை
அழகுறச் சமைப்பேன்!

உன் எழில் வதனம் ஒவ்வொரு நாளும்
என்முன்னே தோன்றி இடர் செய்கின்றதை,
நீயுணராது நெருப்பேன் சொரிகிறாய்?
ஊமை போல் இருந்தேன்
உழன்றிடச் செய்கிறாய்?
தங்க விளக்கே தயவாய்க் கேட்கிறேன்;
நீ எனைப் பார்த்து சிரிப்பதை விடுக!
என்னுடன் இன்மொழி பேசுதல் தவிர்க!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவியாய் கேட்கிறேன் உத்தமி
உடனே என்னை
கொடுஞ் சொற்களால் ஏசித் திட்டி
சண்டை பிடித்துச் சந்தியில் இகழ்ந்து
கண்ட கனவை கலைத்துத் துரத்திடு!
வெறுத்தெனை விட்டு விலகிடு!
இல்லையேல் உன்னை
என்னால் மறக்கவெண்ணாதே!

தினகரன் 74



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெற்றிகள் மலியும்

நினைவுத் தீயில்
நெடுநாளாய்க் குளித்து
நீறாகப் போகிறது நெஞ்சம்!

நீ மட்டும் தாயின் இறக்கைக்குள்
ஆறுதல் பெறும் கோழிக் குஞ்சாய்
நிம்மதி காணுகிறாய்!

உன்னை எண்ணி இரவும் பகலும்
மண்ணில் கிடந்து இற்றுப் போகும்
இரும்புத் துண்டாய்
என்னை இழக்கிறேன்.

உன் காந்தக் கரங்கள் பட்டால்
உடனே கட்டித் தங்கமாய்
உயிர்த்தெழுவேன்!
இதயம் கனிந்த அன்பை சொரிவாய்!

மனம் இருந்தால்
விரைந்து வந்து விளக்கேற்று!
வெற்றிகள் மலியும் நமக்கு!

தினக்குரல் 2007



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தவிப்பும் தேடலும்

என் கைக்குள் வந்து சேர்ந்த
விலை மதிக்க முடியா மாணிக்ககல் மோதிரமே,
பித்துப் பிடித்தவனாய்,
கனவுலகில் எனை மறந்து;
உன்னை மேலே மேலே எறிந்து
என் விரலில் சுயமாய் விழுவாய் என்று
விரல்களை உயரவிரித்துப் பிடித்து
உன்னோடு விளையாடினேன்!

எங்கிருந்தோ வந்த சுழிக்காற்று
உன்னை அள்ளிக்கொண்டு போயிற்று!
ஆற்றிலோ குளத்திலோ
ஆடுகள் மேயும் முள்ளுக் காட்டிலோ?

எங்கு விழுந்தாயோ தெரியாமல்
கலங்கிக் கலங்கி
என் ஆயுளை அரைவாசிக்கு மேல்
தொலைத்துவிட்டு
நெடுநாளாய்த் தேடுகிறேன்!

என் கரத்துக்கு அணி சேர்க்காவிட்டாலும்
இதயத்தில் அணிந்து
நினைத்து நினைத்து ஏங்குகிறேன்
மனதால்அழகு பார்த்த வண்ணம்!

வீரகேசரி *2007*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர் பிழைக்க

எரிந்து முடியும் மெழுகுதிரி
இதயம் துடிக்கிறது!
நினைவு மலர்கள்
ஆழமாய்க்குடையும்
நடுச்சாமம்.....
சிலந்தி பின்னும் வலை
சித்திரத்தில் உன் முகம்!
வான் நட்சத்திரமாய் மின்னும்!

பறந்து பறந்து
விளக்கில் விழும் விட்டில் பூச்சிகள்!
வீணாய் மடிந்தே போகின்றன.

வெள்ளைக் காகிதத்தில்
உன் அப்பிள் முகம் கண்டு
உயிர்பிழைக்க
எழுது ஓர் இனிய கவிதை!

தினக்குரல் 2012



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உபாயம் என்ன?

பூஞ்சோலைக்குள் அமர்ந்து;
புதியதொரு காவியத்தைத் தொடங்கி;
ஆசை ஊஞ்சலிலே ஆட்டி;
எனை உவகையெனும் பொய்கை உளே
நீந்த வைத்து;
தீஞ்சுவைகள்தந்து
அத்தான் தேகமெலாம் இன்பரசம் தேக்குதற்கு
வாஞ்சையுடன் துணைபுரிந்த வட்ட நிலா
கொஞ்சம் நில்
வசனம் சொல்க!

உன் தலைவர் தருவிருந்தால் உளம் மலர
வெண்ணிலவே உன்னை ஈன்றாள்,
அன்புடனே இசைந்ததனால்,
ஆகாய வீதியிலே அலைந்தலைந்து
இன்புறவே தேடுகிறாய்!
என் நிலையோ மிகமோசம்
இளைத்துப் போனேன்!

என் இதய வீட்டினிலே
இருளகற்றும் மன்னவனை இன்னும் காணேன்;
பண்புநிறை வண்ணமுகம்
பங்கயம் போல் மென்னுடம்பு
பவளக்கால்கள்
முன்போல விளங்காது
முன்னின்றும் பேசாது முயற்சியாவும்
பின்போட்டு வந்திதயம் பிழிகின்றாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவமலரே பீடை என்ன?
என்று அன்னை வினவுகிறாள்
ஏதுரைத்துத் தப்புவது ?
வழியொன் றோது!

உனக்கிந்த நிலைவந்தும் ஒளி நிலவே
உயிர்பெற்ற உபாயம் என்ன?
எனக்கு மட்டும் கூறிவிடின்
எவருக்கும் நானுரையேன்,
என்றும் என்னுள் நினதுருவம் அழியாது!
நெய்குழலிற் பூச்சூடி
நிறை வாழ்வெய்த
மனக் கோட்டை யுட்புகுந்து
மறுமலர்ச்சி நான்காண
மார்க்கம் சொல்க!

54



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பற்று கோல் தாராயோ?

என்னிதயப் பெட்டகத்துள்
இன்ப விளக்கேற்றும்
கண்நிறைந்த மன்னவனே,
கட்டறுக்கும் சீமானே,
அன்பே உருவாகி
ஆசையெலாம் தீர்ப்பவரே,
உன் நினைவால் இங்கே
உருகித் துடிக்கின்றேன்.....

செப்பஞ் செய்துள்ள
செழுங்கருணைச் சேர்க்கையிலே
ஒப்பில்லாப் பூரிப்பில் உள்ளங்களி கூர;
இப்போதே வந்தென்
இடர்களைய மாட்டாயோ?
வெற்பான தோளன்றி
வேறொன்றும் கண்டறியேன்!

சுற்றமெலாம் தீய்க்கும்
சுடுநெருப்பைப் போக்காயோ?
கொற்றவனே
சிந்தை குளிர்வது நான் எக்காலம்?
பொன்னன் நடராசா பூபாலன்
நம்முடைய திண்ணன் வடிவேலும்,
தேள்கொட்டும் பார்வையினால்
முன்வந் தனுதினமும் மோகவலை வீசுகிறார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் செய்வேன்?
பேதை இவள் ஏங்கி மனம் வாடுகிறேன்.
நீயன்றி வேறெவர்க்கும்
நெஞ்சில் இடமில்லை!
நோய் தீர்க்கும் வித்தகனே
நுண் சுவையே
என்னுடைய தாயூரில் வாழும் தனியரசே
வந்தணைப்பாய்
மாயாது வாழ்வேன் மகிழ்ந்து!

தினகரன் '65



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாராயோ நெடுரெயிலே

காட்டை அழித்து, கரடு முரடான
மேட்டைச் சமப்படுத்தி
மேன்மை அடைவதற்கும்;
பேறான செல்வத்தைப் பேணிக்
கரை ஏறி
ஆராத இன்பம் அடைந்து மகிழ்வதற்கும்;
பாதை இரும்பாற் படைத்து,
நிலைமையினை ஓதி நிறுத்தி;
உறுதியுடன் ஓடென்று
கைகாட்டும் தூணும்,
களைப்பாற நல் இடமும்;
வைத்தவள நாட்டில்
வளைந்தோடும் நீள்ரெயிலே;
உன்னைத்தான் தேடுகிறேன்
ஓடிவர மாட்டாயோ?
இன்னும் சுணங்கி
எனை வருத்திக் கொல்லாதே!

அன்புடையான்
என்றன் அகம்நிறைய வீற்றிருக்கும்
மன்னவனார் தந்த
மடல் கொண்டு சேர்க்காயோ?
ஏழெட்டு நாளாய் எழுதாது
இதயத்தில் மூளும் பெருங்கனலைப்
போக்கவழி காணாது
மாய்ந்து புலம்புகிறேன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாபெரிய பட்டினத்தில்
ஓயாதுழைக்கும் உயிர்த்தோழன்;
நேர்கரத்தால் அன்புற்றெழுதும்
அருமைக் கடிதத்தை;
கொண்டுவந்து சேர்த்தாற்குளிர்வேன்
புகைவண்டி!
உன்னைத்தான் தேடுகிறேன்
ஓடிவரமாட்டாயோ?
இன்னும் சுணங்கி
எனை வருத்திக் கொல்லாதே!

காலங்கடத்தாது காற்றாக வந்திடுவாய்!
நாளும் உனைத் தொழுவேன்!
நன்றி மறவாது வைத்திருப்பேன் நெஞ்சில்!
வருவாய் கெதியாக!
கைத்ததெனக் கிங்கே கனிகள்
பொருளெல்லாம் மண்ணாய்த் தெரிகிறது!

மஞ்சத்தில் நான்கிடந்து
புண்ணாய் உடலெங்கும்
பொல்லா வலியெடுக்க
உண்ணாது உறங்காதுழல்கின்றேன்!
காதலரின்
அன்பு மடல்கொண்டு சேர்ப்பாய் புகைவண்டி!
உன்னைத்தன் தேடுகின்றேன்
ஓடிவரமாட்டாயோ?
இன்னும் சுணங்கி
எனை வருத்திக் கொல்லாதே!

எத்தனை நாள் உன்வரவுக் கேங்குவது?
எங்களூர் மத்தியில் வந்து
மலர் சொரிவதெக்காலம்?
எங்கே உறங்குகிறாய்?
ஏன் நெடும் பாதையெதும்
பங்கம் அடைந்துளதா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவச்சுமை தாங்காது எங்கேனும்
யாரும் இறப்பை அழைத்தாரோ?
பொங்கியதா வெள்ளம்?
புலையர் எவரேனும்
சங்கிலியிற் கைபோடச்
சண்டையெதும் செய்தாரோ?
இல்லையெனில் ஆணி
இழுத்துப் புரட்டினாரோ?
பொல்லா நெருப்பில் புழுங்குகிறேன் நீள்வண்டி!
உன்னைத்தான் தேடுகிறேன்
ஓடிவரமாட்டாயோ?
இண்னும் சுணங்கி
எனை வருத்திக் கொல்லாதே!

காலை மலரிற் கருவண்டு தேனெடுக்க,
நீலக் குயிலுமென்
நெஞ்சில் கனல் சொரிய,
நாயகனை எண்ணி நலிகின்றேன்;
இவ்வூரார் தீயில் அலர் எண்ணெய் ஊற்றுகிறார்
நானவரின் பாதமலர்சேரப்
பசியால் அலைகின்றேன்!
சோதனையா செய்கின்றார்?
சோல்வார் எனக்கில்லை!
மாலை இருளில் மடிகின்றேன்!
மண்ணவரின் கோலம்
விழியிற் குவிகிறது அன்பு வண்டி!
உன்னைத்தான் தேடுகிறேன் ஓடி வரமாட்டயோ?
இன்னும் சுணங்கி
எனைவருத்திக் கொல்லாதே!

வீரகேசரி 1966



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்க்கை இனிக்கிறது

நெஞ்சில் எழுந்த நெடுந்தாகம்
தீர்க்குமுயர் வஞ்சி;
எனது மன வாஞ்சை அறிந்தோடி
செந்தேனை வெல்லுமவள்
செவ்விதழ் போல் பானமொன்று;
கொண்டுவந்து தந்தாள் குளிர்பானம்!
நான்மகிழ்ந்து நன்றியென்றேன்!
வீணை நவின்றாள் புதுக்கதைகள்!
சிந்தை இனிக்கச் சிரித்தாள் ஒளிவீச்சில்
சொக்கினேன் மெய்மறந்து
சொற்பமங்கே சிந்தியது!
துக்கமுற்றாள்
சேர்த்துத் துடைத்தேன் விழி நீரை!

பக்கென்றோர் சிற்றெரும்பு
பாய்ந்து வந்து மோந்ததனை;
மிக்க மகிழ்வால் பறந்தயல் வாழ்பவற்றைக்
கூட்டி வந்து காட்டிக் குடித்து;
மகிழ்வுற்று;
மீண்டும் அவை ஓடி
மிகப் பெரிய கூட்டத்தைப்
பாட்டோ டழைத்துவரல் பார்த்தாள்!
கனி இதழில் ஓட்டம் எடுக்கிறது
ஓர்முறுவல்.. பூரித்தேன்!

நாளெல்லாம் ஓடிநயம்பெருக்கி
பாடுபட்டு வாழத்தெரிந்து;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பசிப் பிணி போக்குகின்ற
சிற்றுயிர்காள்;
கண்டெடுத்த தேன்ரசத்தை மற்றவர்க்கும்
உண்ணக்கொடுத்தே
உவக்கத்தெரிந்த விதம்
எங்கிருக்கும் பள்ளியிலே ஏறிப்படித்தீர்கள்?
இங்குள்ளோர் காண இயம்பீரோ?

பொன் காசை வெட்டிப் புதைத்து
அதன்மேல் பாய்விரித்துப் பேசாமல்;
பட்டமரம் போல் படுத்துப்
பாய்நதியைப் பூட்டி வைத்து;
நிற்கும் மலையான நீசரெலாம்
உங்களிடம் கற்றுத் திருந்தாரோ?

என்று நான் மீதியை ஊற்ற
இவள் முகத்தில் பூத்ததே உண்மைப்பொலிவு!
மனம் நிறைய வார்த்தாள் புதுத்தேனை;
வாழ்க்கை இனிக்கிறது!

வீரகேசரி *1967*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகமூடி கிழிகிறது

உன்னுடைய முகமூடி கிழிகிறது ராஜா;
ஓடிப்போ
ஓர்கணமும் நில்லாதே ஓடு!
சின்னதொரு பூனையெனச்
சிரித்து நீ வந்தாய்!
சிறுத்தையென மாறி
எனைச் சினந்து கொல்லப் பாய்ந்தாய்!
வந்தவுடன் எல்லோரும்
வாழ்த்தி உனை நெஞ்சால் வரவேற்றார்!
வள்ளலென வாஞ்சை மிகவைத்தேன்!
கண்நிறைந்த செல்வமெனக்
காதலித்தாய் என்னை!
கடிதினில் உன் சுயரூபம் கண்டு
பிழைத்திட்டேன்!

மன்னாதி மன்னன் போல்
மகத்துவங்கள் கூறி,
மயக்கி எனைப் "பொற்கொடியே
மகிழ்வூட்ட வாராய்!
இன்னமுதம் கடைந்துன்போம்
இசைந்தென்னோ டினைவாய்!

இதயத்தில் ஏற்றி
உனதெழில் காப்பேன் அன்பே
முன்னைவினைப் பயனாலே
மூண்டது நம் காதல்;
முக்கனிகள் பிசைந்துண்போம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறுவல்புரி கண்ணே!"
என்றென்னைப் பின்தொடர்ந்தீர்;
இரவு பகல் முற்றும்!
இன்றோ நான் உங்களுக்கோர்
வேப்பங்காய் ஆனேன்!

கல்லுமதில் வீடோடு
காரொன்றும் கேட்டு,
கையேற்க மறுத்தென்னைக்
கவலை விலங்கிட்டீர்!
நல்லவர் போல் நடிப்பதிலே
வல்லபெரும் மேதை;
நஞ்சை இனிப்பால் மறைத்தீர்!
நவீன விருந்திட்டீர்!
கொல்வதற்கா காதலித்தீர்?
கோவேந்தே உன்னால்,
குமைந்து மனம் வெந்தழிந்தேன்
குமுறுமுனே ஓடு!

வல்லவரென் சோதரர்கள்
வாழவைப்பார் போ! போ!
வந்தவழியால் உனது
சொந்த இடம் சேர்வாய்!

உன்னையொரு பொருட்டாக
எண்ணி அழமாட்டேன்!
ஓடிவிடும் இங்கிருந்து
கோடிமைல் தூரம்!
கண்நிறையக் காமத்தீ
ஏந்தி வந்த வண்டே;
கருணையினால் ஏமாந்துன்
கபடவலை வீழேன்!
உன்சுயரூபம் தெரிந்தேன்
உய்வடைந்து விட்டேன்!
உத்தமரென் றொருவருமே
உவந்தெடுக்கார் உன்னை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னுமெனைப் பார்த்திங்கேன்
இழிக்கின்றாய் பல்லை?
எனைக் காக்கும் இளவல் அதோ
இசைந்தெழுந்தார் ஓடு!
உன்னை ஒருபோதும் எண்ணி
உளம் வருந்த மாட்டேன்!
ஓடிப்போ ஓடிப்போ
கோடிமைல் தூரம்!

தினகரன் 73



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொல்லா இல்லாத தோணிகள்

வெயில் மழையில் குளித்து
மனம் உடைந்து
துறையைக் கடக்க முடியாமல்
வெப்பிசாரத்தோடு;
விடி நிலவைக் காண ஏங்கி;
வெம்மையில் கருகி விழிசோரும்
அழகுப் படகுகள் ஆயிரம் இங்கே!

காண்டம் பார்த்துக் கனவில் மிதக்கும்!
சாதமாகிச் சகலதும் செய்யும்!
காத்துக் கிடக்கும் கட்டாந் தரையில்!
கொல்லா இல்லாத தோணிகள்
அணி அணியாக ஆற்றோரத்தில்!

தேனொழுகும் வாயால் தேறுதல் கூறி;
பத்துலட்சமும் பட்டினத்தில் வீடும்;
பதினைந்து பவுனோடு
பறக்கப் புதுக்காரும்;
தந்தால் எங்களின் தங்க மகன்,
கைஏற்றுக் கரை சேர்ப்பான்!
கனிவிளையும் உங்கள் காணி! என்று,
ஒப்புதல்தந்து போனவர்கள்,
ஒளித்து விளையாடுகிறார்கள்!
மலரை துணிந்தெடுத்து
மணக்கமுடியாத மாக்களின் கூட்டத்தார்!

அம்மா மணிகள் விலையும்
தலைக்கு மேல் போகிறது!
அண்டா வயிறர்களின் அக்கிரமம்
தொலையும் நாள்;
தோணிகள் கரையேறும் பொன் நாள்!
இனிய பயணம் தொடர இணையுங்கள்;
மாபெரும் சுனாமி வரமுன்!

செங்கதிர் 12



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வளம் சேர்ப்போம்

பொழுது இன்னும் விடிய வில்லை!
புலம்பலும் பூமியில் ஓயவில்லை!

வானில் புதுச் சித்திரங்கள் தோண்றி
துயர்களைய வில்லை!
சிட்டுக்குருவி சிறகசைத்துக் கீச்சிட்டு
பெட்டைத் துணையோடு
பேசிக்குதித்துக் களிக்கவில்லை!

பூக்கள் சிரித்துப் புதுமணம் கொட்டி
மனக் காயங்கள் ஆற்றவில்லை!
வண்டுகள் தேனுண்டு
வாயாரப் பாடிக் களிப்பில் விழவில்லை!

மாங்குயில் கூடி
மருட்டும் குரலெடுத்துச்
செவியில் தேன்வார்க்கவில்லை!
தெய்வ உணர்வோடு யாபேரும்
எழில் தீபமேற்றி மகிழவில்லை!
ஆனந்தத் தேன்கனியை
அள்ளிச் சுவைத்து ஆசைகள் தணியவில்லை!

ஏனின்னும் பொற்காலம்
எமக்கு வரவில்லை?
பொல்லா இருளில் பூமித்தாய் சிக்குண்டாள்!

மல்லுப்பிடித்து மரணத்தை வளர்க்கின்றோம்!
கண்ணுள்ளவர்கள் துயில் கலைந்து;
வல்லிருளை மாற்றி
வளம் சேர்க்க வேண்டும்!

தினக்குரல் 96



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறகு முளைத்த பறவை

சிறகு இல்லாத பச்சைக்கிளி
இளம் யுவதியாய் எம் வீட்டுக்கு வந்தாய்!
வாஞ்சையொடு வாரி எடுத்து
பால் பழம் ஊட்டிப் பாதுகாத்தோம்!

காலையில் வீட்டுள் இருந்து வெளிக்கிட்டு
வெளியில் உலாவி விறாந்தையில் இருப்பாய்!
மாலையில் அறைக்குள் புகுந்து
என் மக்களோடு துயில் கொள்வாய்!
உன்னை நிலத்தில் விடாது வளர்த்தோம்!

வாசல் பூமரத்தில் ஏறிப் புறுபுறுத்தாய்!
கண்களில் ஆழ்ந்த கவலை கொடிகட்டியது!
மண்டபத்துள் நடந்தாய்
மாமரத்தில் ஏறி இருந்தாய்!
வீதியைப் பார்த்து வியப்படைந்தாய்!
உன் விழிகளால் விண்ணை அளந்தாய்!

தனித்திருந்து சில நாள்
தலை வாசலில் கீச்சிட்டாய்!
தூரத்தில் அது எதிரொலித்து வந்தது!
சோர்வுப் போர்வையை
ஒருநாள் சுழற்றி எறிந்தாய்!
வீரச் செட்டையை விரித்துப் பார்த்தாய்!
தொடர்ந்தது உன்விளையாட்டு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று யாருக்கும் சொல்லாமல்
பறந்தே போய்விட்டாய் பாவி!
நீ இல்லாத சோகம் நெருப்பாய் வதைக்கிறது!

இறக்கை முளைப்பது பறப்பதற்காகத்தான்!
நீ விரும்பியவனோடு பறந்து போனாலும்
நிறைவோடு நீடு வாழ்க!
சிறகு முளைத்த இடத்தையும் மறவாதே மகளே!

யாத்திரா 2001



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மடிகிறது உயிர்

பூவொன்றை நுகர்ந்தவன்
புளகாங்கிதம் அடைந்தான்!
நின்று ரசித்தான் நெடுநேரம்!
புன்னகைத்தான் மெய்மறந்தான்!

பூவும் அவனை விரும்பி முறுவலித்தது!

ஆசை அலையில் தள்ளாடி
அகம் திறந்தான் உரையாடினான்!
மலரும் கண்களால் கவர்ந்து
பேசிக் கலந்து சிரித்து மகிழ்ந்தது!

தன்னை இழந்த தும்பியாய்,
மேலே தாவிப் பறந்தான்!
பூவும் தொடர்ந்து துடித்தது!

திடீரென மூளையில் வெளிச்சம் பரவ
இது என்ன சாதிப்பூவோ? யாரறிவார்?
நறுமணம் நல்லதுதான்;
ஊரிலே காணாத புதுப்பூவையே மணந்தால்,
நோய் நொடியில் தவிக்கவும் நேரும்!

வேண்டாம் இந்த மணமலர்!
இது கோயில் பூசைக்கே உரியதென்று
'கோட்பய்' சொல்லிப் பிரிந்தே சென்றான்!
திரும்பவே இல்லை அத்திருவாலி!
வாடிவிழும் பூக்களை எல்லாம்;
மிக விருப்போடு
மண்தாய் அணைத்துக் கொள்கிறாள்!
வேதனையால் மடிகிறது உயிர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியர் இல்லை எனில்

இந்த உலகின் இயக்கங்கள் யாவினுக்கும்
உந்துசக்தி என்னும்
உயிர் கொடுப்போன் சூரியனே!
சூரியன் இன்றி எந்தச் சூட்சுமமும் தோன்றாது!

பொல்லா இருளில் புடையன் தலைநீட்டும்!
நல்லொளியில் தோன்றாத
நஞ்சு விலங்கினங்கள்,

எங்கும் உலாவி
எமைவருத்தும் தொல்லிருளில்!
கல்லு முள்ளுத் தாக்கி
எமைக் காயப்படுத்திவிடும்!
இங் ..ங் என்ற பாட்டோடே
எங்கிருந்தோ ஓடிவந்து
குத்தும் நுளம்பு
குலைநடுக்கம் தந்து விடும்!

கொள்ளை, கொலை, களவு,
கூடாத காரியங்கள்,
என்றும் நிகழ்தல் இருளில்தான்!
ஆதலினால்;
கைவிளக்கின்றி கணமும் இருள்வழியில்
செல்வதற் கென்னுடைய சிந்தை இளகாது!
மின்னொளி இல்லாத வேளை,
என்கட்டிலிலே சாய்ந்திருப்பேன்
ஆயிரம் கற்பனைகள் ஓடிவரும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசல மாங் கொப்புகளில்
வந்து தங்கும் தேன்குயில்கள்!
பாசத்தோ என்னைப் படி என்று
அதிகாலை கல்..கல்..கல்.. என்று
மிகக் கத்தி துயில் எழுப்பும்!
கண்விழித் தென்னுடைய
ஜன்னல் கதவுகளைக் கையால் திறப்பேன்
கதிரோன் சிரித்தெழுவான்!

தங்கப் பனைஓலை
தானாய் முளைத்தது போல்
எங்கள் கிழக்கே எழுவான் இளங்கதிரோன்!
முற்றத்தில் றோசா முகைஅவிழ்க்கும்;
அவ்வேளை சுற்றிவளைத்துச்
சுயபுராணம் பாடி
தேனைப் பருகித் திசை மாறும் வண்டினங்கள்!
வண்டர்களைக்கண்டால் வாதை மிக அடைவேன்!

கத்தரி பூத்து நின்று கண்சிமிட்ட
தென்னோலை பாட்டுப் படிக்க
அருந்தென்றல் நங்கைவந்து
பூமணத்தை அள்ளி பொலியச் சொரிந்திடுவாள்!
மாபலா வாழை மனம்கனியத் தேன்சொரியும்!

நான் எழுந்து ஆசிரிய நற்பணிகள்
ஆற்றுகிறேன்!
இந்த உலகின் இயக்கங்கள் யாவினுக்கும்
உந்து சக்தி தந்தே உயிர்கொடுப்போன்
சூரியனே!... சூரியன் இன்றி
எந்தச் சூட்சுமமும் தோன்றாது!

சூரியன் இப்பாரில் சூழும் இருளோட்டி
தாவரங்கள் பூத்துத் தழைக்க
வழி செய்கின்றான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்... பாலர் அகத்தின் இரளகற்றி
சிந்தனையால்...
வையம் செழிக்க வழி செய்கின்றார்!
ஆசிரியர் ஊருக்கழகு நடைகாட்டி
பேசரிய தொண்டால்
பெருமைபல சேர்க்கின்றார்!

ஆதவனைப் போலேதான் ஆசிரியர் இவ் உலகில்!
ஆசிரியர் இல்லை எனில்
ஆழ்ந்த இருள்வாட்டும்!
பேசமுடியாது பிழைகள் மலிந்து அழிக்கும்!
ஊள்ளத்தில் உண்மை ஒளி
ஒன்றும் இருக்காது!
தார்வீதி போலத் தகிக்கும் மனத்தினரின்
போர்க்களமாய்
இந்தப் புவி நாறத் தீ பரவும்!

கண்ணில்லா வீரர்
கரத்தில் கொல்வாளெடுத்து
முன்னேற்ற ஜீவனெல்லாம்
மூன்று துண்டாய்ப் போட்டிடுவார்!
அண்ணனைத் தம்பி
அரிந்து கறிசமைப்பான்!
பூக்கும் புது மலரைப்
போதையினால் கொய்தெடுத்து
ஆசைகளைப் போக்கி
அடுப்பில் விறகெரிப்பார்!
வெம்பி மனம் நோக
விலை போகும் தர்மங்கள்!
நம்பிக்கை இன்றி
நடைப்பிணமாய் நாம் மாழ்வோம்!
பொல்லா விலங்கே புவி ஆளும்!
போட்டியினால்
சாவுக்கே செய்வார் சமர்!

ஆசிரியம் 91



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்டுத்தீ

மூங்கில் புளியை முதிரை நிழல்வாகை
தீங்கனிச்சோலை கருங்காலி விண்ணாங்கு;
சேர்ந்தடர்ந்த காட்டில்
சிறுபறவைக் கூட்டமாய்;
வாழ்ந்துவந்தோம் நாங்கள்
வழமைப் பிரகாரம்!
தாய்தந்தை முன்னோரும்,
தங்கி நெடுங்காலமாய்
வாயில்லாச் சீவனென
வாழ்ந்துவந்தார் இவ்வூரில்!

கல்லும் உருகிக் கரையும் வெயிற்போரில்
நெஞ்சம் கருகி நெழிந்து கிடக்கையில்;
காட்டுத்தீ வைக்கும்
கலைதேர்ந்த மேதைகளே;
கூட்டுக்குள் கத்துமெங்கள்
குஞ்சுக் கிரைதேடி,
தூரப் பறந்த துணைவன் உணவோடு
கூடுவரும் முன்னே;
கொல்லும் நெருப்பள்ளிப்
போடுவீர் என்று புரியவில்லை!
நீர் வைத்த காட்டுத்தீ
எம்மைக் கதிகலக்கி ஓர் நொடியில்
கூட்டைத் துறந்து
குதித்தோடப் பண்ணிற்றே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கச்சான் காற்றோடு
கனவேகமாய் எழுந்து,
உச்சமாய்ப் பொங்கி,
உலை வைத்திற்றெம் வாழ்வை!
தத்திப் படர்ந்து தடதடெனப் பாய்ந்ததீ;
மிச்சமெதும் இன்றி
மிக நாசம் செய்திற்றே!
என்ன சுகத்தை இதயத்தில் கண்டீரோ?

பன்நாளாய் எங்களது
வாயால் கடித்திழுத்துச்
செய்த கூடெல்லாம்;
சிறுநொடியில் சாம்பராய்
ஆக்குவதற்கா அறிவை வளர்த்தீர்கள்?

மண்டை கிழிந்து
மயானப் பெருவெளியாய்
பூமியை ஆக்கிப் புளகம் அடைவதற்கா?
சிந்தனைச் செல்வம் சிறப்பாகச் சேர்த்தீர்கள்?
விந்தை எனக்கின்னும்
விளங்க முடியவில்லை!

மாரிக்கெனச் சேர்ந்த
மாணிக்க நெல் மணிகள்;
கூதலுக் கென்றுவைத்த,
குச்சிவகை கொஞ்சமும்
ஆருக்கும் இன்றி அநியாயமாயிற்றே!

என்துணையும் குஞ்சுகளும்
எங்குபோய்ச் சேர்ந்தாரோ?
பொங்கிப் புகைமயமாய்
பூத்த சுவாலைக்குள்,
வெந்து மடிந்தாரோ?
வெறியர்கள் கையாலே
சுட்டுப் பொசுக்கிச் சுடலைக்குள் தின்றாரோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீனூட்ட ஆளின்றித்
தேன்குஞ்சும் செத்திற்றோ?
வானுலகுபோனாரோ?
வாயில்லாச் சீவன்கள்?

எங்களுக்கு நீதி எவருள்ளார் கேட்கவென்று
பங்கப் படுத்திப் பதைபதைக்கக் கொன்றாரோ?
நாலைந்து நாளாக
நானுணவு கொள்ளாமல்
மூலையில் குந்தி முகம் சோர்ந்து மாய்கின்றேன்!

இந்த நிலையை
எமக்குக் கொடுத்தாரை
சந்திக்கப் போகேன்!
சகவாசமும் கொள்ளேன்!
வெந்து மனம் புண்ணாய் வேகும்போதென்றும்
விருந்தும் விளையாட்டும்
வேண்டாதென் உள்ளம்!

துரும்பெடுத்துத் தூணாய்த்
தொடுத்தமைத்தங்கே
குடிபுக வேண்டும்!
குழந்தைகளைத் தேடி
இடம் பிடிக்க வேண்டும்!
இடரின்றி வாழ்வதற்கே!

மல்லிகை 83



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு மழை நாள்

மார்கழி மாதம் மழை
வெள்ளம் போடாமல் ஆறாது!
வானில் அடர்ந்த கருமேகம்!

ஆறேழு நாளாய்
அடைமழையிற் காணாத
சூரியனைப் பார்க்கச் சுகமாய் இருக்கிறது!

கூனி இரு காக்கை
மாங்கொப்பில் கரைகிறது!
வானவில் ஒன்றும் மலர்ந்து தெரிகிறது!

பீலியினாற் கொட்டும் பெருமழையும்
பேய்க்காற்றும்
வேலியொடு வீட்டில்
வெறித்தீர்த்தும் ஓயாதோ?
வீட்டுக்கதவெல்லாம் வீங்கி
இழுத்தடைத்துப் பூட்ட முடியாது
பொறுப்பாய் இருக்கிறது!

தீயை உமிழாது
தேய்ந்த தீப்பெட்டிகளும்
காயட்டு மென்று கதவோரம் போட்டுள்ளேன்
சங்கிலியைப் பிய்க்கச்
சமர்பரிந்து மேற்பாயும்
எங்களின் நாய்கூட
இன்னும் எழும்பவில்லை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலைக்குள் கால்கள் முடங்கிப் படுக்கிறது!
காலை மலரும் முன்
கண்விழிக்கப் பிந்தி விட்டேன்!
பாலுக் கழும் எனது பாலன்,
எழும்பும் முன்;
அவனின் சீலைகளைத் தோய்த்தால்
சிரமம் குறைந்துவிடும்!
நீராய்க் கிடக்கும் நெடும்பாய் தலையணைகள்;
ஈரவிறகும் எடுத்துலரப் போட்டிடலாம்!

கீரை கருவாடு கிழங்கை அரிந்தெடுத்து,
நீரள்ளிக் கொண்டு
நெருப்பெடுத்தால் சோறாகும்!
காயாவிறகும் கசியும் அடுப்போடும்
ஓயாதடையும் உபத்திரவம் நீங்காதோ?

நேற்றிரவு முற்றும் எனை
நித்திரை இல்லாது செய்து
வீறிட்டழுது
வெறும் முலையைச் சப்பியவன்;
கண்ணயர்ந்து தூங்குகிறான்
காற்றும் அடிக்கிறதே...!

இன்னும் சிறுபொழுதில்
எங்களுக்கே பாடுபடச் சென்றவர்
என்மீது சீவனையே வைத்திருக்கும்
அத்தானும் வந்திடுவார்!
ஆசை மகன் அழுதால்
ஏசுவார் நல்ல இரக்கம்
அவன் மீதும்!

பாசமுடன் அன்பு படரவைக்கும்
தங்கமகன்;
சோற்றைக் கடைந்து
சுவைக்கும் ரசம் விட்டுச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்த்துப் பிசைந்து
சிறுயக்கில் வெந்நீரும் வைத்துவிடின்,
ஓடிவந்து வாய்மலரக் கூத்திடுவான்!
கைத்த துயர்
செல்வக் கனி வாய் மொழி கேட்டால்
ஓடிமறையும்
ஒருநூறு மைல் தூரம்!

வாடிக்கையாக
மீன் கொண்டுவந்து விற்பவனை
ஏழெட்டு நாளாக
இத்தெருவில் காணவில்லை!
நாளைக் கடத்தல்
நமக்கு பெருந்துயரே!

மாலைவரை வானம்
மழை பொழிய வில்லை எனில்
பாலுக்கழும் எனதுபாலன்
மகிழ்ந்திருப்பான்!
வேலைசெயும் என்கணவர்
வீட்டுக் கெழில் சேர்ப்பார்!
நாளைக்கு இவ்வானம்
நன்றாய் வெளித்துவிடும்!

கவிஞன் 70



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுழல் வட்டம்

என் இனிய மகளே
இவ் இளங்காலை நேரம்;
எழுந்துவரும் சூரியன் போல்
எம் தோட்டத்துக்குள்
உன் அறையைத் திறந்து வைத்தே
உலாவிவரும் காட்சி;
ஒவ்வொரு நாளும் மனதை
உருக்குதடி வந்து!

உன் காதல் நாயகனோடு
ஓடியநாள் அன்றே
ஒருவரோடும் பேசாமல்
ஒளிபோன தென்றேன்!
கண்நிறைந்த ஓவியம் போல்
கைகளுக்குள் நாங்கள்;
காத்து வளர்த்ததை எல்லாம்
காற்றோடே விட்டாய்!

பாற்பெட்டி விசுக்கோத்து
பழரசம் தேன் மருந்தும்
பார்த்தூட்டி நோயென்றால்
பதை பதைத்துத் துடித்தோம்!

ஆளான போதுவெடி
ஆலாத்தி கொழுத்தி;
அகம் மகிழ்ந்தோம்! திருமணத்துக்கு
ஆசையுடன் இருந்தோம்!...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலுக்காய் நீ அழுதால்
பார்த்தழுவாள் அன்னை
பசிக்குணவை ஒறுத்துவிட்டும்
பால் வாங்கித் தந்தோம்!
காலால் நீ என் நெஞ்சில்
அன்றுதைத்த தெல்லாம்,
கல்லாக்கிக் கொள் அப்பா
நெஞ்சை என்றுதானோ?

உன் அன்னை என்னோடே
ஓடிவரும் போது,
ஊரெல்லாம் திரண்டெழுந்தார்,
ஊமைநிலை வென்றார்!
உன் அன்னையின் தந்தை
உளம் நொந்தே அழுதார்!

என்னோடு சேர்ந்துன் அன்னை
இனிமை பல சேர்த்தாள்!
இனசனத்தார் மகிழ்ந்துரைத்தார்!
இகழ்ந்தவர்கள் புகழ்ந்தார்!
இன்றுமகள் போய் பல நாள்;
ஏங்குகிறோம் நாங்கள்!
எப்போது உன் ஊர் புகழ
இருக்க வருவாய் நீ?

நீ ஓடிப் போனதுபோல்
உன்மகளும் ஓடும்!
யானடையும் சோகம் போல்
நீ அடைதல் கூடும்!
யாதுமுணரா நிலையில்
ஆசை அலை மோதும்!
வான் முழுதும் இருளாகும்!
வாடை எழுந்தாடும்!
வாழ்வு விழல்
வாசல்மனை தூசு எனலும் ஆகும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேனமுதம் காசு பணம்
தேவை இலாது ஓயும்!
தென்பை அழிக்கும் நெருப்பு
தேகமெலாம் பாயும்!
கானமழை பெய்வது போல்
காதலிசை தொடரும்!
கவலையொடும் இன்பம்வரும்
கலந்து சுழல் வட்டம்!

வீரகேசரி 83



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்கமிலாது வாழ்வோம்

உள்ளறையைத் திறந்து மலர்தூவி
உண்மைக்கு வரவேற்புக் கூறு!
நெஞ்சச் சுமைகள் இறங்கும்
இளைப்பாறு!
முற்றத்தில் பூக்கும் முழுநிலவு;
களங்கமற உறவாடு உயிரோடு!
ஆழக்கிணற்று நீர் அள்ளிப் பருகி
அகம் மகிழ்நீ!
இதயக் காயங்கள் ஆறும்
பழைய துயரெலாம் மாறும்!

அன்பு மழையில் அனுதினமும் குளித்து
நம்பிக்கையோடு நட
புதுச் சாதனைகள் நிலைநாட்டு!
புத்தெழுச்சி பொங்கும்!
காதலினால் கயமைகள் கரையும்!
பேரொளியில் கலந்து நிலை பெறலாம்!
சங்கையொடு வாழும் சரித்திரத்தில்
பங்கமிலாது வாழ்வோம் நிறைவோடு!
எவரையும் தேநீர் மண்டியாய்
தெருவிலே ஊற்றாமல்;
தேங்காய்ச் சிரட்டையாய்
அடுப்பிலே போடாமல்!

*தினகரன் 2010*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓயாத எரிமலை

பாலப்பம் விற்கவந்த பாவை கையைப்
பரிகாரி பிடிப்பது போல் பிடித்து பார்த்தான்!
பாலப்பம் முழுவதையும் எனக்கு தாநீ!
பசிக்குதடி பாற்குடமே மெலிந்து போனேன்!

நீலமலர் விழியாளே நிறைநிலாவே!
என்நெஞ்சை உன்நெஞ்சம் ஆக்கிப் பார்நீ!
வேளையெல்லாம் உன்நினைவு விடமாய்க் கொல்லும்!
வெகுளாதே தேன்மலரே விடியும்வேளை;
காலைஒளிச் சூரியன்போல் கைக்குள் வந்த
கனியே நான் விரும்புகிறேன் வருவாய் என்றான்!

வீரத்தோடவள்கையை இழுத்துக் கொண்டாள்!
வெகுண்டெழுந்தாள் சிறுத்தை போல் உறுமுகின்றாள்!

சூரப்பற்றைமேலே துணியை போட்டீர்!
சுலபமாய்க் கழற்றிவிட எண்ணம் கொண்டீர்!
சோரம்போய் வாழவில்லை மங்கையர் நாம்!
சொகுசாக மலர்தாவும் வண்டை நாடோம்!
வீறாப்புப் பேசியெமை வீழ்த்த வந்தீர்;
வேளையெலாம் போராடி வெற்றி காண்போம்!
ஆராய்ந்து பார் உன்றன் நெஞ்சுக்குள்ளே
அன்னை உடன் பிறந்தவளை எண்ணி பார்நீ!

தாய்மை நலம் தெரியாத தருக்கர் கூட்டம்
தகாத செயல் புரிவதற்கே முந்துகின்றார்!
தூய்மைநிறை கனியமுதைச் சுவைத்துத்தின்று;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூவென்று குப்பைக்குள் வீசுகின்றார்!
காய்க்குமிளங் கதலிகளைக் கருகவைத்தால்;
கனி பொலியுமா ஊரில்?
கருணையில்லார் நாய்போல அலைகினறார்!
உலுத்தர் கூட்டம்!
நங்கையர்க்கு மதிப்பளித்து நடக்க வேண்டும்!

ஓயாத எரிமலையாய்
அவள் வெடித்தாள் !
உணர்த்துகிறேன் பாடம் என
முறைத்தாள்! போனாள்!


82



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சடாட்சரன் கடந்துவந்த பாதை, அவர் கனவு கண்ட மனோரம்மியமான புதிய பாதையல்ல. நாம் எல்லோரும் கடந்துவந்த கல்லும் முள்ளும் நிறைந்த, மேடும் பள்ளமுமான பாதைதான். அங்கங்கே சில நீர் நிலைகள், சில பூஞ்சோலைகள். அதுதான் யதார்த்த உலகின் நடைபாதை. அந்தப் பாதையில் நடந்த அவரது அநுபவங்கள் இந்தத் தொகுப்பில் பதிவாகியுள்ளன.

பெரும்பாலான கவிதைகள் நமது யதார்த்த உலகின் அநுபவப் பதிவுகள்தான். அவற்றில் மகிழ்ச்சியை விட வலி அதிகம் இருக்கும். குறிப்பாக 1990க்குப் பிறகு அவர் எழுதிய கவிதைகளில் இந்த வலி மனதைப் பிசையும் வலியாக இருக்கிறது.

சமூகப் புன்மைகள் ஒழிந்து, இன மோதலும் முரண்பாடும் மறைந்து, அன்பும், இன்பமும், வளமும் நிறைந்து பொலியும் ஒரு சுவர்க்கத்தை இம்மண்ணில் காண விழையும் மனம் சடாட்சரனுடையது. அந்த மனதின் உணர்வுகள்தான் அவரது கவிதைகள். அவை மானுடம் பாடும் கவிதைகள். பாதை புதிது கவிதையின் தொனிதான் அவரது முழுக் கவிதைகளின் தொனியும் என்பதை நான் அழுத்திக் கூறலாம். காலம் தாழ்த்தியாவது அவரது தேர்ந்த கவிதைகள் சில ஒரு தொகுப்பாக நமக்குக் கிடைப்பது மகிழ்ச்சியே. சடாட்சரனின் எல்லாக் கவிதைகளும் நூலுருப்பெற வேண்டும் என்பதே என் விருப்பம். அது விரைவில் நிறைவேறும் என்று நம்புகின்றேன்.

எம்.ஏ. நுஃமான்

ISBN: 978-955-44061-0-0

cover Design - Nawas sawfi

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org